உ

ஓம் குஹாய நம:

திருப்புகழமிர்தம்.

ஒரு சிறந்த மாத வெளியீடு.

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

(மலர் 3.)

வெகுதானிய௵ சித்திரை௴ முதல் பங்குனி௴ வரையில்
1938௵ ஏப்ரல் ௴ முதல் 1939௵ மார்சு௴ வரையில்.

திருப்புகழ்த் தொண்டன்,

கிருபானந்தவாரி.

"திருப்புகழமிர்தம்" ஆபீஸ்,
108, சாமிநாய்க்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

1939

இதன் விலை ரூ. 1-8-0. தபாற்கூலி வேறு.

திருப்புகழமிர்தம்.

விஷயங்கள்.	பக்கங்கள்.
திருப்புகழ் (பதவுரை, பொழிப்புரை, விரிவுரை, கருத்துரையுடன்)	

இரண்டாவது படைவீடு

திருச்செந்தூர்---கமலமாதுடன்	1
,, - கொலேமத	33
,, - இயலிசையில்	38
,, - பூரணவாரகும்ப	65
,, - மூளும்வினை	97

மூன்றுவது படைவீடு

பழநி---நாதவிந்து	129
சிவனார்மனம்	161
,, - தகரநறுமலர்	395
,, - கடலைபொறி	227
,, - தலைவலி	259
,, - அவனிதனிலே	291
,, - ஆறுமுகம்	323
,, - கருவினுரு	355

புராண வரலாறுகள்

பூரணவார

(1) கஜேந்திரன் வரலாறு	71

நாதவிந்து

(1) சேரமான் பெருமான் நாயனர் உலாபாடிய வரலாறு	137

தகரநறுமலர்

(1) கோவர்த்தனகிரியை குடையாகப்பிடித்த வரலாறு	200
(2) விதுரனில் வருபவன்	203

த[illegible]லி

(2) ஆழியில் அணைக்கட்டிய வரலாறு	264
(2) திருநடன வரலாறு	276

அவனிதனிலே

(1) மவுனேபதேச வரலாறு	296

விஷயங்கள்.	பக்கங்கள்.
ஆறுமுகம் ஆறுமுகம்	
(1) கணபதி கஜமுகனை வதைத்த வரலாறு	328
கருவினுரு	
(1) உரகணைச்செல்வன் உலகளந்த வரலாறு	360
பரமன் பரவையினிடத்தில் தூதுசென்ற வரலாறு	365
சிவானந்த லஹரீ	7, 41, 73, 105, 141, 168 206. 232, 271, 300, 333, 369
கந்தர் திருவிளையாடல்	
அயவணச்சிறை புரி திருவிளையாடல் சிவோபதேசம் தாருகன்வதை	12, 45, 76; 109, 145, 172,
அறுமுகக் கடவுளுக்கு வியாழபகவான் அசுரர் வரலாறு கூறுதல்	210, 235, 274, 303, 336, 372
கற்பு---மங்கலவதி	16
,, - (விசாகையார்)	51
,, - (அமுதவல்லி, குமுதவல்லி)	83
,, - (மீராபாய்)	115
,, - (ஜோதிபாய்)	151, 179
,, மனைவிகணவனிடம் ஒழுகும் முறை	217, 375
,, கணவன் மனைவியை நடத்தும் முறை	241, 277, 309, 341, 375
அறம்---	22
,, நகுலோபாக்யானம்	55
கொல்லாமை	25, 89
வணக்கமுறை	30
குமாரகுருபர ஸ்வாமிகள் சரித்திரம்	94, 128, 157, 223 255, 285, 314
பேராசை பெருநஷ்டம்	124
திருநீற்றுமகிமை	226, 288, 312
பதஞ்சலிமுனிவர் யோகசூத்திரம்	182, 252, 281
தலைமைப் பேருரை	186
நமதுகடமை	246
வேண்டுகோள்	289
பொங்கல் விழா	319
அற்புதப்பத்திரிகை	320
விபூதி	347
பலியினல் வரும் பாவம்	[illegible]79
பொன் மொழிகள்	11, 15[illegible] 332
இரண்டு உபதேசரத்தினங்கள்	50
வினவிடை மணிகள்	64, 222, 284, 2[illegible]9
உபதேசம்	114, 140, 150, 17[illegible] 216, 276, 354
நெடுங்காலம் உயிருடன் வாழ்ந்திருக்கும் முறை	231, 240

உ

குஹமயம்

சந்தாநேயர்களுக்கு வேண்டுகோள்

எல்லாம் வல்ல இறைவனருளால் நமது திருப்புகழமிர்தத்திற்கு பிரமாதி ஹு சித்திரைமீ முதல் 4வது ஆண்டு ஆரம்பமாகிறது.

இதற்கு போதிய சந்தாநேயர்கள் இல்லை. காரணம், 1வது, 2வது ஆண்டில் சேர்ந்த நேயர்களில் சிலர் தொடர்ச்சியாக ஆதரிக்காததுதான். 3வது ஆண்டில் சேர்ந்த நண்பர்களும் 1, 2.வது மலர்களை வாங்காமலும் இருந்து வருகிறார்கள்.

1வது ஆண்டுமலரில் 13 திருப்புகழ் பாசுரங்களுக்கு விரிவான உறை, முருகன் பெருமை, கற்பிலக்கணம், பெரியார்கள் சரித்திரம், உபதேச மொழிகள் முதலியவைகளும், 2வது ஆண்டு மலரில், 14முதல் 26வரை (13) திருப்புகழ் பாசுரங்ளுக்கு விரிவானவுரை, கந்தர் திருவிளையாடல் (கந்தபுராண சுருக்கம்) சுப்பிரமணிய புஜங்க ஸ்தோத்திரம் உறையுடன், பிரமசரியம் கிருகஸ்தம், கதிர்காம யாத்திரை, திருவிளக்கு பூசை, வீட்டுநெறி, நாம் ஏன் பிறந்தோம், தர்மம், பதிவிரதைகள் சரித்திரமுதலியவைகள் வெளிவந்திருக்கிறது. 1. 2. 3.வது ஆண்டு மலர்களிலுள்ள விஷயங்கள் ஒன்றிலுள்ளது 2வது 3வதுக்கு தொடர்ச்சியாகவுமிருக்கிறது.

ஆகையால் 3 வது ஆண்டில் சந்தாதாராகச் சேர்ந்த அன்பர்கள் 2-வது ஆண்டு மலர்களையும், 2-வது ஆண்டில் சேர்ந்தவர்கள் 1, 3-வது ஆண்டு மலர்களையும். 1-வது ஆண்டில் சேர்ந்தவர்கள் 2, 3-வது மலர்களையும் வாங்குவதுடன் எல்லோரும் 4-வது ஆண்டிலும், சந்தாதாராகவும், கொடையாள (ஜீவிய சந்தாதார) ராகவும் சேர்ந்து, நமது வீட்டிலுள்ள சகோதரர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வருடத்திலும் ஆடை வாங்குகிற மாதிரி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திருப்புகழமிர்தம் வாங்க முயற்சிசெய்யவேண்டும். அவ்விதம் செய்ய முடியாவிடில் ஒவ்வொரு வீட்டிற்கும், ஒவ்வொரு வாசகசாலைக்கும் ஒவ்வொரு திருப்புகழமிர்தம் இருக்கும்படி ஒவ்வொரு சந்தா நேயரும் "யாம் பெற்ற இன்பம் இவ்வையம் பெறுக" என்ற வாக்கியத்திற்கிணங்க ஒன்றுக்கு குறையாத பல புதிய சந்தா நேயர்களையும் சேர்த்துக்கொடுத்து திருப்புகழமிர்தத்தை ஆதரிக்க வேண்டுகிறேன்.

அவ்விதம் ஆதரித்தால் 4-வது ஆண்டில் 2 அல்லது 3 திருப்புகழ் பாசுரங்கள் உறையுடனும், கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, உரையுடனும், வீட்டுநெறி முதலியவைகளுடன் சிறப்பாக வெளிவரும்.

திருப்புகழ் தாசன்,
1791 நெ. சந்தாதாரன்;

சில அன்பர்கள் திருப்புகழமிர்த இதழ்களை இரவல் கொடுத்து தொகுதியாக இல்லாமல் வைத்திருக்கிறார்கள். அவர்கள் குறைந்த இதழ்களுக்கு திருப்புகழமிர்தம் ஆபீசுக்கு ஸ்டாம்பு அனுப்பி அவைகளை தொகுத்து ஒவ்வொரு மலரை (12 இதழ்களை) யும் பைண்டு செய்து பொக்கிஷமாக வைத்துக்கொள்ள வேண்டுகிறேன்.

உ

ஓம் குஹாயநம:

திருப்புகழமிர்தம்.

(All Rights Reserved)

"திருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 3 Vol. 3 | வெகுதான்ய ஹூ சித்திரைமீ
ஏப்ரல்—1938 | இதழ் 1. No. 1.

திருப்புகழ்.

திருச்செந்தூர்.

(27) கமல மாதுட னிந்திரை யுஞ்சரி
சோலவோ ணுதம டந்தையர் சந்தன
களப சீதள கோங்கையி லங்கையி
விருபோதே

களவு நூல்தெரி வஞ்சனை யஞ்சன
விழியின் மோகித கந்தசு கந்தரு
கரிய வோதியி லிந்துமு கந்தனின்
மருளாதே

அமல மாகிய சிந்தைய டைந்தகல்
தோலைவி லாதஅ றம்பொரு ளின்பமு
மடைய வோதியு ணர்ந்துத ணந்தபின்
அருள்தானே

அறியு மாறுபெ றும்படி யன்பினி
னினிய நாதசி லம்புபு லம்பிடு
மருண வாடக கிண்கிணி தங்கிய
அடிதாராய்

குமரி காளிப யங்கரி சங்கரி
கவுரி நீலிப ரம்பரை யம்பிகை
குடிலை யோகினி சண்டினி குண்டலி
யெமதாய்

குறைவி லாளுமை மந்தரி யந்தரி
வெகுவி தாகம சுந்தரி தந்தருள்
குமர மூஷிக மூந்திய ஐங்கர

கணராயன்

மமவி நாயக னஞ்சுமிழ் கஞ்சுகி
அணிக ஜானன விம்பனொ ரம்புலி
மவுலி யானுறு சிந்தையு கந்தரு

ளிளையோனே

வளரும் வாழையு மஞ்சளு மிஞ்சியும்
இடைவி டாதுநெ ருங்கிய மங்கல
மகிமை மாநகர் செந்திலில் வந்துறை

பெருமாளே.

பதவுரை.

குமரி - என்று மகலாத இளம் பருவத்தையுடைய கன்னிப் பெண்ணும், காளி - துர்க்காதேவியாக விளங்குபவளும், பயம் ஹரி - அடியவர் பயத்தை நீக்குபவளும், சங்கரி - ஆன்மாக்களுக்குச் சுகத்தைச் செய்பவளும், கவுரி - பொன்னிறத்தை யுடையவளும், நீலி - நீல நிறத்தையுடையவளும், பரம்பரை - பெரிய பொருள்களுக்கெல்லாம் பெரிய பொருளாக வீற்றிருப்பவளும், அம்பிகை - உலகமாதாவும், குடிலை - சுத்தமாயையும், யோகினி - யோகினி யென்னுந் தெய்வமாக இருப்பவளும், சண்டினி - பாவிகளுக்குக் கொடியவளாகத் திகழ்பவளும், குண்டலி - குண்டலி சத்தியும், எமது ஆயி - எங்கள் தாயும், குறைவு இலாள் - குறைவில்லாதவளும், உமை — உமாதேவியும், மந்தரி - சுவர்க்கலோகத்தை யருள்பவளும், அந்தரி - முடிவில்லாதவளும், வெகுவித ஆகம சுந்தரி - பலவகைப்பட்ட சிவாகமங்களால் துதிக்கப்படும் கட்டழகுடையவளுமாகிய பார்வதிதேவியார், தந்தருள் - பெற்றருளிய, குமர - புதல்வரும், மூஷிகம்உந்திய ஐங்கர - பெருச்சாளியின் மீது எழுந்தருளியவரும் ஐந்து கரங்களையுடைய[illegible], கணராயன் - கணங்களுக்கெல்லாந் தலைவரும், மம விநாயக[illegible] எமது விநாயகக்கடவுளும், நஞ்சு உமிழ் கஞ்சுகி - விஷத்தைக் கக்கு[illegible] சர்ப்பத்தை, அணி கஜ ஆனன - ஆபரணமாகத்தரித்துக்கொண்டுள்ள யானைமுகத்தையுடையவரும், விம்பன் - ஒளியை யுடையவரும், ஒரு

அம்புலி மவுலியான் - ஒப்பற்ற பிறைச் சந்திரனைச் சடைமுடியில் தரித்துக்கொண்டுள்ளவருமான விநாயகமூர்த்தி, உறு சிந்தை உகந்து அருள் - மிகவும் மனமகிழ்ந்து அருளத்தக்க, இளையோனே - இளைய பிள்ளையாரே!, வளரும் வாழையும் மஞ்சளும் இஞ்சியும் - (நீர்வளத்தால்) செழித்து வளர்ந்துள்ள வாழையும் மஞ்சளும் இஞ்சியும், இடைவிடாது நெருங்கிய - இடைவெளியின்றி நெருங்கியுள்ளதும், மங்கல - மங்கலகரத்தையுடையதும், மகிமை - மகிமையுடையதும், மா நகர் - பெரிய நகரமுமாகிய, செந்திலில் வந்து அருள் — செந்திலம்பதியில் (அடியார்பொருட்டு) வந்து எழுந்தருளியுள்ள, பெருமாளே - பெருமையின் மிக்கவரே!. கமல மாதுடன் - தாமரைமீது வாழுகின்ற இலக்குமிதேவியுடன், இந்திரையும் - இந்திராணியையும், சரி சொலொணாத - அழகில் நிகரென்று சொல்லுதற்கொணாத பேரழகுடைய, மடந்தையர் - மாதர்களுடைய சந்தன களப சீதள கொங்கையில் - சந்தனத்தையும் கலவைச்சாந்தையும் பூசிக்கொண்டுள்ள குளிர்ந்த தனங்களின்மீதும், அம் கையில் - அழகிய கரங்களிலும், இருபோது எய் - இரவு பகலாகிய இரு வேளைகளிலும் பொருந்தியிருந்து, களவு நூல்தெரி - மதன நூல்களைத் தெரிந்ததும், வஞ்சனை - வஞ்சனையைச் செய்வதுமாகிய, அஞ்சன விழியில் - மை தீட்டிய கண்களிலும், மோகித கந்த சுகந்தரு - மோகத்தை யுண்டுபண்ணுவதும் வாசனையுடையதும் சுகத்தைத்தருவதுமாகிய, கரிய ஓதியில் - கரிய நிறத்தையுடைய கூந்தலிலும், இந்து முகந்தனில் - சந்திரனைப்போன்ற முகத்திலும், மருளாதே - அவைகளைக்கண்டு மயக்கத்தை யடையாமல், அமலம் ஆகிய சிந்தையடைந்து - மலம் நீங்கிய பரிசுத்தமாகிய சிந்தையையடைந்து, அகல் தொலைவு இலாத - விசாலமானதும் அழிவில்லாததுமாகிய, அறம் பொருள் இன்பமும் - அறம் பொருள் இன்பம் என்கின்ற புருஷார்த்தங்களும், அடைய ஓதி உணர்ந்து - என்னை வந்து அடையும்படி அறிவுநூல்களை ஓதியுணர்ந்து, தணந்தபின் - ஆசைகளின் கட்டுநீங்கியபின், அருள்தானே அறியுமாறு பெறும்படி - தேவரீரது திருவருளின் எளிமையைத் தானாகவே அறியும் வழியை அடியேன் அடையுமாறு, இனியநாத சிலம்பு புலம்பிடு - இனிமையான ஓசையையுடைய சிலம்பு சத்திக்கின்றதும், அருண - சிவந்த நிறத்தையுடையதும், ஆடக கிண்கிணி தங்கிய - பொன்னாலாகிய சதங்கைகள் அணியப்பெற்றதுமாகிய, அடி- அன்பினின் தாராய் - திருவடியை அன்போடு தந்தருள்வீர்.

பொழிப்புரை.

என்றும் இளமையாகவே இருக்கும் கன்னிப்பெண்ணும், துர்க்கையும், அடியவர்களது பயத்தை யகற்றுபவளும், ஆன்மாக்களுக்கு இன்பத்தை வழங்குபவளும், பொன்னிறத்தை யுடையவளும், நீலநிறத்தையுடையவளும், பாரத்பரியும், உலகமாதாவும், சுத்தமாயையும், யோகினியென்னுந் தேவதையாக இருப்பவளும், பாவிகளுக்குப் பயத்தையுண்டுபண்ணுபவளும், குண்டலிசத்தியும், ஆன்மாக்களாகிய எங்களுடைய அன்னையும், குறைவில்லாதவளும், உமாதேவியும், சுவர்க்கலோகத்தை நல்குபவளும், முடிவில்லாதவளும், பலவகைப்பட்ட சிவாகமங்களால் துதிக்கப்படுகின்ற கட்டழகுடையவளுமாகிய பார்வதியம்மையார் பெற்றருளிய குமாரரும், பெருச்சாளியின்மீது எழுந்தருளி வருபவரும், ஐந்து திருக்கரங்களையுடையவரும், கணங்களுக்குத்தலைவரும், எமது விநாயகமூர்த்தியும், விஷத்தைக் கக்கும் பாம்பை யாபரணமாகத் தரித்துக்கொண்டவரும், யானைமுகத்தை யுடையவரும், ஒப்பற்ற பிறைச்சந்திரனைத் தரித்த சடாமவுலியை யுடையவருமாகிய மகா கணபதி மிகவும் மகிழ்ந்தருளுகின்ற இளைய பிள்ளையாரே! நீர்வளத்தால் வாழையும் மஞ்சளும் இஞ்சியும் இடைவிடாது நெருங்கியுள்ளதும், மகிமையும் இலக்ஷ்மிகாமும் உடையதுமாகிய திருச்செந்தூர் என்னும் பெரிய க்ஷேத்திரத்தில் அடியார் பொருட்டுவந்து எழுந்தருளியுள்ள பெருமையின் மிக்கவரே! இலக்குமிதேவியும் இந்திராணியும் நிகரென்று சொல்லுதற்கொண்ணாத பேரழகுடைய மகளிரது சந்தனக்கலவைச் சாந்துகளையணிந்துள்ள குளிர்ந்த தனபாரங்களிலும்; அழகிய கரங்களிலும்; இரவுபகலாய்ப் பொருந்தியிருந்து மதனநூல்களை யுணர்ந்து வஞ்சனையைச்செய்யும் மைதீட்டிய கண்களிலும்; மோகத்தைத்தருவதும் பரிமளத்தையுடையதும் சுகத்தைத் தருவதுமாகிய கரியகூந்தலிலும்; சந்திரனையொத்த முகாரவிந்தத்திலும் மயக்கத்தை யடையாமல், மலநீங்கிய பரிசுத்தமான சிந்தையையடைந்து; பரந்துள்ளதும் அழிவற்றதுமாகிய அறம் பொருள் இன்பம் என்ற புருஷார்த்தங்களை அடைய அறிவுநூல்களை ஓதியுணர்ந்து (ஆசைக்கட்டுகளினின்றும்) நீங்கியபின், தேவரீர் திருவருளைத் தானுகவே அறியும் வழியை அடையுமாறு இனிய நாதங்களோடு கூடிய சிலம்புகளிருந்து சத்திப்பதும், சிவந்த நிறத்தோடுகூடியதும், பொன்னாலாகிய கிண்கிணிகளையணிந்துள்ளதுமாகிய திருவடிகளை யடியேனுக்கு அன்புடன் தந்தருள்வீர்.

விரிவுரை.

அமலமாகிய சிந்தை :—

ஆணவ அழுக்கு நீங்கப்பெற்ற சுத்தஸ்படிகம்போன்ற தூய மனத்தை யடைந்தவர்க்கே இறைவன் திருவடிப்பேறு உண்டாகும். அத்தகைய அமலமாகிய சிந்தையடைந்தவர்க்கு அறம் பொருள் இன்பமாகிய புருஷார்த்தங்களுண்டாகும்.

இனிய நாத சிலம்பு .—

முருகப்பெருமான் ஒருவராலும் எதிர்க்கவொண்ணாத சூராதி யவுணர்களையழித்த வீரமூர்த்தியாதலால் அவருடைய திருவடிகளில் வீரச்சிலம்புகள் இனிமையாக ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

குமரி :—

உமாதேவியார் எல்லா உலகங்களையும் ஈன்றும், என்றும் குமரி யாகவே விளங்குகின்றனர்.

" அகிலாண்ட கோடி யீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே "

தாயுமானர்.

பயங்கரி :—

அடியாரது பயத்தை யகற்றுபவர்

" இறுகிய சிறுபிறை யெயிறுடை யமபடர்
எனதுயிர் கொளவரின்
யானேங்குதல் கண்டேதிர் தானேன்று கொளுங்குயில் "

—வகுப்பு.

எமதாயி :—

ஆன்மாக்களையெல்லாம் ஒருங்கே ஈன்ற உலகமாதாவாதலால் எங்கள் தாய் என்றனர்.

" உதரகமலத்தினிடை முதியபுவனத்ரயமும்
உகமுடிவில் வைக்கும் உமையாள் "

—வகுப்பு

வேத் விதாகம சுந்தரி:—

சகல வேதாகம மந்திரவடிவாய் அம்பிகை விளங்குகின்றார்.

" தமருக பரிபுர வோலிகோடு நடநவில்
சரணிய சதுர்மறை
தாதாம்புய மந்திர வேதாந்த பரம்பரை "

—வகுப்பு.

" அக்ஷர லக்ஷ ஜபத்தர்க்க மத்திடு
சக்ர தலத்தி த்ரியக்ஷி சடக்ஷரி "

—வகுப்பு.

சிந்தையுகந்தருள் இளையோனே:—

விநாயகப்பெருமான் தமது தம்பியாகிய குமாரக்கடவுளை மன மகிழ்ந்து தழுவி இன்புறுவர் என்பதனை திருப்போரூர் சந்நிதிமுறை யில் சிதம்பர சுவாமிகள் கூறுமாறுகாண்க.

ஆதரவா யடியவருக் கருள்சுரக்கு
மைங்கரத்தோன் அன்பு கூர்ந்து
மாதவமே எனவழைத்துப் புயத்தணைக்கத்
திருவுளத்து மகிழுங் கோவே
ஏதமுறு தடியேனைக் காத்தளிப்ப
துன்கடனு யிசைப்ப தென்னே
போதமலர் கற்பகமே போரூர்வா
ழாறுமுகப் புனித வேளே.

கருத்துரை.

உமாதேவியாருளிய விநாயகப்பெருமானது இளைய சகோ தாரே! செந்தில் வாழும் பெருமாளே! பெண்களது அவயவங்களில் மயங்காது, தூய சிந்தையடைந்து, புருஷார்த்தங்களைப்பெற்று, தேவ ரீரது திருவருளையடையுமாறு இனியநாத சிலம்பு புலம்பிடுந் திருவடித் தாமரையைத் தந்தருள்வீர்.

DR

ஓம் ஸுப்ரஹ்மண்யாய நம:

॥ शिवानन्दलहरी ॥

சிவானந்த லஹரீ

(ஆதிசங்கரர் அருளிச் செய்தது)

நான்முகம்

சிவனெனும் பேர் தனக்கேயுடைய செம்மேனிச் செஞ்சடைக்கடவுள் ஒருவரே உலகங்களுக்குத் தனிப்பெருந் தலைவர் என்பதையும், காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி ஐம்பெருந் தொழில்களைத் தமது சங்கற்பமாத்திரத்தாலேயே செய்து ஆன்மாக்களுக்கு அழியாத வீடு பேற்றை நல்கும் பரமகருணாமூர்த்தி அவர் ஒருவரே என்பதையும், அவரையன்றி பிற தெய்வங்களை வந்தியாத பரமபதிவிரத நிலை இதுவே என்பதையும், அவரை வழிபாடு செய்யும் வகைகளையும் இனிது எடுத்து, நமது கன்னெஞ்சங் கரைந்துருகுமாறு ஆதிசங்கர பகவத்பாதர் "சிவானந்த லஹரீ" என்னும் இத்திவ்விய பிரபந்தத்தை திருவாய்மலர்ந்தருளினர். இத்தகைய அரிய தோத்திர நூலை அன்பர்கள் பொருள்தெரிந்து பக்தியுடன் பாராயணஞ்செய்யில் இகபர நலன்களை எளிதில் பெறுவார்கள் என்பது ஒருதலை. ஆதலால் இதனை விளக்குதும். அன்பர்கள் ஓதிப் பயன்பெறுவார்களாக.

நூல்

कलाभ्यां चूडालङ्कृतशशिकलाभ्यां निजतपः-
फलाभ्यां भक्तेषु प्रकटितफलाभ्यां भवतु मे ।
शिवाभ्यामस्तोकत्रिभुवनशिवाभ्यां हृदि पुन-
र्भवाभ्यामानन्दस्फुरदनुभवाभ्यां नतिरियम् ॥ १ ॥

(1). கலாப்4யாம் சூடாலங்க்ருத சசிகலாப்4யாம் நிஜதப:
ப2லாப்4யாம் ப4க்தேஷு ப்ரகடித ப2லாப்4யாம் ப4வது மே|

சிவாப்யா மஸ்தோக த்ரிபுவன சிவாப்யாம் ஹ்ருதி புநர்
பவாப்யா மானந்தஸ்புரதனு பவாப்யாம் நதிரியம் ||

அவதாரிகை.

சங்காசாரியர், சிவபெருமானுடைய நமஸ்கார மகிமையால் சகல நலன்களையும் அடைந்து, பிறவிக்கடலைத் தாண்டுமாறும், அன்னியர்களைத் தாண்டவைக்குமாறும், சிவபெருமானைத் துதிசெய்யத் தொடங்குகின்றவராய், எடுத்துக்கொண்ட நூல் இனிது முற்று பெறும்பொருட்டு உமாமகேச்சுரரை வந்தனை வடிவாகிய மங்கல ஸ்லோகத்தை அருளிச்செய்கின்றனர்.

பதவுரை.

இயம்	- இந்த,
மே	- என்னுடைய,
நதி:	- நமஸ்காரமானது,
கலாப்யாம்	- வேதம் முதலிய சகல கலைகளின் வடிவினர்களாயும்,
சூடாலங்க்ருத சசிகலாப்யாம்	- சிகையில் அலங்கரிக்கப் பெற்ற சந்திர கலையை யுடையவர்களாயும்,
நிஜதப: பலாப்யாம்	- தங்களுடைய தவங்களுக்குப் பல பூதர்களாயும், (சிவமூர்த்தியின் தவத்திற்கு உமையும், உமையின் தவத்திற்குச் சிவனும் பலனைத்தருகிறவர்கள்)
பக்தேஷு ப்ரகடித பலாப்யாம்	- தமது பக்தர்களிடத்தில் பிரகாசஞ் செய்யப்பட்டிருக்கிற மோக்ஷம் முதலிய நலன்களையுடையவர்களாயும்,
அஸ்தோகத்ரிபுவன சிவாப்யாம்	- அதிகமாயுள்ள மூவுலகங்களுக்கும் மங்களத்தைச் செய்கிறவர்களாயும்,
ஹ்ருதி	- மனதில்,
புனர் பவாப்யாம்	- தியானஞ் செய்வதனால் புதிது புதிதாய் அடிக்கடி யுண்டாகிறவர்களாயும்,
ஆனந்தஸ்புரதனு பவாப்யாம்	- சந்தோஷத்துடன் பிரகாசிக்கின்ற சொரூப ஞானத்தையுடையவர்களாயு மிருக்கின்ற,
சிவாப்யாம்	- பார்வதீ பரமேச்வரர்களின்பொருட்டு,
பவது	- (இந்த எனது வந்தனம்) ஆகுக.

பொழிப்புரை.

வேதாகமாதி வித்யாவடிவினர்களாயும், செஞ்சடாமுடியினல் அலங்கரிக்கப்பட்ட பிறைச்சந்திரனை தரித்தவர்களாயும், பரஸ்பரம் தாம் செய்யும் தவங்களுக்கு ஒருவர்க்கொருவர் பலனைத்தருகின்றவர்களாயும், தமது அடியார்களுக்கு நலன்களைத் தருகின்றவர்களாயும், மூவுலகங்களுக்கும் மங்களத்தையுண்டுபண்ணுகிறவர்களாயும், தியானிக்குந்தோறும் மனதில் தோன்றுபவர்களாயும், சச்சிதானந்த சொரூபர்களாயுமுள்ள உமாமகேச்வரர்களை வணங்குகிறேன்.

(2) गलन्ती शंभो त्वच्चरितसरितः किल्बिषरजो
दलन्ती धीकुल्यासरणिषु पतन्ती विजयताम् ।
दिशन्ती संसारभ्रमणपरितापोपशमनं
वसन्ती मच्चेतोह्रदभुवि शिवानन्दलहरी ॥ २ ॥

க[3]ளந்தீ சம்போ[4] த்வச்சரித ஸரித: கில்பி[3]ஷரஜோ
த[3]ளந்தீ தீ[4]குல்யாஸரணிஷு பதந்தீ விஜயதாம் ।
தி[3]சந்தீ ஸம்ஸாரப்[4]ரமண பரிதாபோ பசமநம்
வஸந்தீ மச்சேதோ[3]ஹ்ரா[4]தபுவி சிவானந்த[3] லஹரீ ॥

அவதாரிகை.

சிவானந்த வெள்ளத்தின் பெருமையையும் அதன் பயனையும் வியந்து இதில் விளக்குகின்றனர்.

பதவுரை.

சம்போ	- சுக காரணனே,
த்வச்சரித ஸரித:	- உன்னுடைய சரித்திரமாகியநதியிலிருந்து,
களந்தீ	- பெருகுகிறதாயும்,
கில்பிஷ ரஜ:	- பாவமாகிற தூளியை,
தளந்தீ	- நீக்குகிறதாயும்,
தீகுல்யா ஸரணிஷு	- புத்திகளாகிற வாய்க்கால்களின் வழியில்,
பதந்தீ	- விழுந்து வருகிறதாயும்,

ஸம்ஸாரபரிதாபோ பசமனம் - ஜனன மரணமாகிய சமுத்திரத்தில் சுற்றுவதாலுண்டான துன்பத்தினுடைய சாந்தியை,

திசந்தீ - கொடுக்கிறதாயும்,

மச்சேதோஹ்ரதபுவி - அடியேனுடைய மனதாகிய மடுவினிடத்தில்,

வஸந்தீ - வசிக்கிறதாயுமிருக்கிற,

சிவானந்த லஹரீ - உமாமகேச்வரர்களா லுண்டுபண்ணப்பட்ட சந்தோஷத்தின் பெருக்கானது,

விஜயதாம் - எல்லாவற்றிற்கும் மேலானதாக விளங்குவதாக.

பொழிப்புரை.

ஓ சம்போ! தேவரீரது சரித்திரமாகிய பிரவாகத்திலிருந்து பெருகியோடி, எம்போல்வார் பாவமாகிய புழுதியையடக்கி, அறிவாகிய வாய்க்கால் வழியே சென்று, பிறப்பு இறப்பாகிய சமுசாரதுக்கத்தைப்போக்கி, அடியேனுடைய மனமாகிய மடுவில்வந்து தேங்குவதான சிவானந்த வெள்ளமானது எல்லாவற்றிற்கும் மேலானதாக விளங்குவதாக.

"அகண்டாகார சிவ
போகமெனும் பேரின்பவெள்ளம் பொங்கித்ததும்பிப் பூரணமாய்
ஏகவுருவாம் கிடக்குது"

— தாயுமானுர்.

त्रयीवेद्यं हृद्यं त्रिपुरहरमाद्यं त्रिनयनं
जटाभारोदारं चलदुरगहारं मृगधरम् ।
महादेवं देवं मयि सदयभावं पशुपतिं
चिदालम्बं साम्बं शिवमतिविडम्बं हृदि भजे ॥ ३ ॥

(3) த்ரயீவேத்யம் ஹ்ருத்யம் த்ரிபுரஹராமாத்யம் த்ரிணயனம்
ஜடாபாரோதாரம் ஜலதுரகஹாரம் ம்ருகதாரம் ।
மஹாதேவம் தேவம் மயி ஸதயபாவம் பசுபதிம்
சிதாலம்பம் ஸாம்பம் சிவமதி விடம்பம் ஹ்ருதி பஜே ॥

பதவுரை.

த்ரயீவேத்யம்	- மூன்று வேதங்களால் அறியத்தக்கவனும்,
ஹ்ருத்யம்	- மனதிற்கு இஷ்டனும்,
த்ரிபுரஹரம்	- (மும்மலவடிவாகிய) முப்புரத்தை எரித்தவனும்,
ஆத்யம்	- ஆதியிலிருப்பவனும்,
த்ரிணயனம்	- மூன்று கண்களையுடையவனும்,
ஜடாபாரோதாரம்	- ஜடைகளின் மிகுதியால் கம்பீரனும்,
சலதுரகஹாரம்	- அசைகின்ற பாம்புகளை மாலைகளாக உடையவனும்,
ம்ருகதரம்	- மானைத் தரித்துக்கொண்டிருப்பவனும்,
மஹாதேவம்	- பெரிய தேவனும்,
தேவம்	- பிரகாசிக்கின்றவனும்,
மயி	- அடியேனிடத்தில்,
ஸதயபாவம்	- கருணையுடன் கூடிய எண்ணத்தையுடையவனும்
ப்சுபதிம்	- உயிர்களுக்கு ஈசனும்,
சிதாலம்பம்	- சொரூபஞானத்திற்குச் சாதனனும்,
ஸாம்பம்	- அம்பிகையுடன் கூடினவனும்,
அதிவிடம்பம்	- உலகங்களை மிகவும் அனுசரிக்கின்றவனும் விளங்குகின்ற,
சிவம்	- பரமசிவனை,
ஹ்ருதி	- மனதில்
பஜே	- தியானஞ்செய்கிறேன்.

பொழிப்புரை.

மூன்று வேதங்களால் அறியத்தக்கவனும், மனதிற்கினியனும், புராரியும், ஆதிபராபரனும், முக்கண்ணனும், ஜடாதரனும், சர்ப்பாபரணனும், மானேந்தினவனும், மஹாதேவனும், ஆனந்தரூபனும், அடியேனிடத்தில் கருணையுடையவனும், பசுபதியும், சொரூபஞானத்திற்குச் சாதனனும், உமா சமேதனும், உலகங்களை அனுசரிப்பவனுமாகிய சிவபெருமானை மனதில் தியானஞ்செய்கிறேன்.

(தொடரும்).

பொன் மொழிகள்.

(1). உலகத்தை நாம் அறிவோம்; உலகம் நம்மை யறியாது.

(2) பாவலர் எனப்படும் பண்டித ரென்போர்
கேவலப் பொறுமையால் கேடுண்டு வாழார்.

12

உ

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

(2-வது மலர் 367-வது பக்கத்தொடர்ச்சி)

அயனைச் சிறைபுரி திருவிளையாடல்.

வேதாகம ஞானவிநோதராகிய குமாரக்கடவுள் ஆட்டுக்கடாவை வாகனமாகச்செலுத்தி, எவ்வுலகங்களிலும் உலாவிப் பற்பல திருவிளையாடல்களைப் புரிந்துகொண்டு, திருக்கைலாசமலையின்கண் இலக்கத்தொன்பான் வீரர்களும் சூழ எழுந்தருளியிருக்கும் நாள்களில் ஒரு நாளிலே பிரமதேவன் முதலிய தேவர்கள் சிவபெருமானை வணங்குதற்பொருட்டு வெள்ளியம்பொருப்பை யடைந்தார்கள். பிரமனை யொழிந்த யாவரும் முருகவேளை உருகிய மனத்தராய் வணங்கி வழிபட்டு, திருக்கோயிலினுட்சென்று சிவபெருமானையும் உமாதேவியாரையும் முறைப்படி வலம்வந்து வந்தித்து வாழ்த்தி திரும்பினார்கள். பிரமதேவர் மூவர்களுக்கு மெட்டா முழுமுதலாகிய முருகப்பெருமானைக்கண்டு "இவன் ஓர் இளைஞன்றானே" என்று மனந்தருக்குற்று வணங்காது சென்றார். ஆலயத்துட்சென்று அங்கயற்கண்ணியையும் ஐம்முகச் சிவனாரையும் முறையே வணங்கித் தன்னுலகஞ் செல்லுதற்கு திரும்பினார். அறுமுகவள்ளல் அச்செம்பொற்கோயிலின் முகற்கோபுரத்துள்ளே இலக்கத்தொன்பான் வீரர்களும் சூழ எழுந்தருளியிருந்தார். சிவனாரை வணங்கி அச்சிவனாது பழைய வடிவாகிய தன்னை வணங்காது செருக்குடன் செல்லும் தேவர்களுக்குத் தலைவராகிய பிரமதேவரைக்கண்டார். மணியும் ஒளியும் போல் மலரும் மணமும்போல் தாமும் சிவனும் பிரிக்க முடியாத நிலையாமென்பதை உலகிற்குணர்த்தவும், திசைமுகன் செருக்கை யகற்றி நல்லருள்பாலிக்கவும் திருவுளங்கொண்டு, பிரமதேவரை யழைக்க, பிரமதேவர் பெருமான் திருமுன்னரேகி அமரர் வணங்கும் குமாரநாயகனை வணங்காது வணங்கினர்.

முருகக்கடவுள், முண்டகாசனனை நோக்கி, "பிரமனே! நீ யாது தொழில் செய்கின்றாய்?" என்று வினவ, பிரமதேவர் நடு நடுங்கி "யாது விளையுமோ?" என்றஞ்சி, "அடியேன் சிவபெருமானுடைய ஆணையினாலே எல்லாவற்றையும் படைத்தற்றொழில் செய்

கின்றேன்" என்றார். இளம்பூரணன் கேட்டு, திருமுறுவல்செய்து, "நான்முக! நீ படைத்தற்றொழில் புரிவையாயின் உனக்கு வேதங்களெல்லாம் வருமோ?" என்று வினவ, பிரமதேவர், "ஐயனே! ஆதி காலத்தில் என்னைப்படைத்தருளிய சிவபெருமான் வேதாகமங்களைச் செய்து, அவற்றுட் சிலவற்றை யான் உய்யும்பொருட்டு எனக்கு உபதேசித்துள்ளார்; அவற்றை நான் அறிவேன்" என்றார். ஒல மறைகளறைகின்ற ஒருபரம்பொருளாகிய எந்தை கந்தவேள், அவை கேட்டு நகைத்து, நன்று! நன்று! மறைகளை அறிகுதியோ? அங்ஙனமாயின் "இருக்குவேதத்தைக் கூறுதி" என்று திருவாய்மலர்ந்தருள, சதுர்முகதேவர் வேதங்களுக்கெல்லாம் முன் சொல்லப்படும் பிரணவ மந்திரத்தை முன் சொல்லிக்கொண்டு வேதத்தைச்சொல்ல ஆரம்பித்தார். ஆரம்பித்தலும், அப்பிரணவமந்திரத்தைத் தமது திருமுகங்களில் ஒன்றாகவுடைய வேதமந்த்ரஸ்வருபராகிய குமாரக்கடவுள் திருநகைசெய்து, "சதுர்முகா! நிற்றி! நிற்றி! நீ முன்கூறிய 'ஓம்' என்னும் ஒரு மொழிக்குப் பொருள்யாது? அதனைச் சொல்லக் கடவாய்" என்றார். உடனே பிரமதேவர் பிரணவத்தின் பொருள் தமக்கு விளங்காமையால் கண்களை விழித்து நாணமுற்று விக்கித் திகைத்து நின்றனர்.

> முகத்தி லொன்றதா வவ்வெழுத் துடையதோர் முருக
> னகைத்து முன்னெழுத்தி னுத்தரை பொருளென நவில
> மிகைத்த கண்களை விழித்தனன் வெள்கினன் விக்கித்
> திகைத் திருந்தனன் கண்டில னப்பொருட் டிறனே.

சிவபெருமானுக்குப் பீடமாயும், எல்லா மந்திரங்களுக்கும் வேதங்களுக்கும் மூலமாயும், மற்றைத்தேவர்களுக்கெல்லாம் பிறப்பிடமாயும், காசியில் இறப்பவருக்கு எம்பெருமான் உபதேசித்தருளும் தாரகப்பிரம்மமாயும், விளங்கும் பிரணவத்தின் பொருளை மனத்தில் ஆராய்ந்தார். பிரமதேவர் அறியாது நெடுநேரம் தலைகுனிந்து நின்றார்; யாது செய்வார்? சிவபெருமான் திருவருளால் அதனை முன் பெற்றிலர். "வேதங்களைப் பாடங்கேட்டபோது சிவமூர்த்தியிடம் இதனைக்கேட்டுத் தெளிந்துகொள்ளாமற் போயினேமே?" என்று பற்பல எண்ணி ஏங்கினர்; மயங்கி வாடிநின்றார். அதன் பொருளை முருகவேளையன்றி யாவர் சொல்லவல்லவர்? வேதங்களுக்கெல்லாம் முதலினும் இறுதியினும் சொல்லப்படும் "ஓம்" என்னும்

தனிமொழியின் உண்மைப்பொருளைப் பிரமதேவரே அறியாது மயங்கி விழித்தனராயின், நாம் அறிந்தோம் என்பது நகைப்புக்கிடமல்லவா ?

நான்முகதேவர், மனவாக்குகட்கெட்டாத அப்பிரணவமந்திரத்தின்பொருள் இதுவென்று சொல்லாது மயங்கலும், அறுமுகக்கடவுள், "இம்முதலெழுத்தின் பொருளை அறியாத நீ படைத்தற்றொழில் செய்வது எங்ஙனம் ?" என்று கூறி, பிரமதேவருடைய நான்கு சிரங்களும் குலுங்கும்வண்ணம் குட்டி, கீழே குப்புறவீழுமாறு தமது திருவடியால் உதைத்தனர். கற்பகோடிகாலம் கடுந்தவம்புரியினும் கிடைத்தற்கரிய எம்பெருமான் திருவடி பிரமதேவர்மேல் படுவதற்கு அவர் தவமிருந்தவாறு என்னை ? மனத்தருக்கு நீங்கி பிரமதேவர் கீழே விழுந்தார். கந்தக்கடவுள் வீரவாகுதேவரை நோக்கி, "தம்பி! இவ்விருண்ட மனத்தனைச் சிறையிடுக" என்று ஆக்ஞாபித்தருளினர். வீரவாகுதேவரும் ஆங்கு நின்ற வீரர்களுமாகப் பங்கயாசனனைப் பற்றிக்கொண்டுபோய் கந்தவெற்பில் ஓர் குகையில் காங்களிலும் கால்களிலும் விலங்குபூட்டிச் சிறை செய்தார்கள். பிரமதேவர் தனது அறியாமைக்கு வருந்தி சிறையில் துன்புற்றிருந்தனர். ஏனையகணர்களெல்லாம் இச்செயலைக்கண்டு மெய் நடுங்கி குமாரக்கடவுள் திருவடிமேல் வீழ்ந்து வணங்கித் தத்தம் இருக்கை போந்தார்கள்.

இவ்வாறு வாணிகேள்வனை வில்விலங்கு பூட்டச்செய்தபின், வரைமகள் புதல்வராம் குமாரக்கடவுள் கந்தவெற்பிற்சென்று, செம்பொன்னாலயத்தில் வீற்றிருந்து, ஒரு திருமுகமும் நான்கு திருக்காங்களுங்கொண்டு, ஒரு திருக்காம் ஜெபமாலையும், ஒரு திருக்காம் கமண்டலமுந்தாங்க, மற்றை இரு திருக்காங்களும் வாதமும் அபயமுந்தா, படைத்தற்றொழில் செய்யத் தொடங்கினர். நவவீரர்கள் இலக்கவீரர்கள், இந்திரன், திருமால், தேவர்கள், இருடியர் முதலிய கணத்தவர்கள் எம்பெருமானைச் சூழ்ந்து துதித்து நின்றார்கள்.

ஒருகாந் தனிற் கண்டிகை வடம்பரித் தோருதன்
காதலந் தனிற் குண்டிகை தரித்திரு காங்கள்
வாத மோட பயந்தாப் பாம்பொருண் மகனேர்
திருமுகங் கோடு சதுர்முகன் போல் விதி செய்தான்.

ஆறுமுகப் பெருமான் தாம் செய்தருளுகின்ற படைப்புத்தொழிற்கேற்பத் திருமகள்கொழுநனாற் காத்தற்றொழிலும், உருத்திரமூர்த்தியால் அழித்தற்றொழிலும், முடியாதென்று கருதி அவற்றை

யுந்தாமே செய்தருளி முத்தொழிற்கும் மூவர்க்கும் தாமே முதல்வர் என்பதைக் குன்றின்மேலிட்ட விளக்கென உணர்த்தி யருளினர் இந்திரற்கும் அதனல் அரசில்லையாயிற்று; தேவவருடங்கள் பலகழிந்தன; விருப்பும் வெறுப்புமின்றி, அடியார்களது விருப்புவெறுப்புக்களை நீக்கி யருள்புரியும் பராபரமூர்த்தியாகிய செவ்வேட்பெருமான் படைத்த அப்படைப்பில் தோன்றிய ஆன்மாக்கள் பெற்றபேற்றை இத்தன்மைத்தென்று நுண்ணறி வுடையோராலுங் கூறுந்தகையதோ? யாவரும் புண்ணியவடிவாகவே விளங்கினர். தீவினை என்பது அறவே நீங்கிற்று; சொற்பிரபஞ்சம் பொருட்பிரபஞ்சம் என்னும் இருவகைப்பிரபஞ்கங்களையெல்லாம், பன்னிருபுயக்கடவுள் தான் நிமித்த காரணனுக நின்று முதற்காரணமாகிய மாயையிலிருந்து, துணைக்காரணமாகிய சத்தியைக்கொண்டு முத்தொழிலியற்றி உயிர்களுக்குத் திருவருள்புரிந்தனர்.

ப்ரஹ்ம சாஸ்தஸ்வாமீ ! வாமேகரேச யுகளேவா
தண்டி கேச ஸ்வ்யேக்ஷ ஸூத்ர மபயந்ததம்
விசாகம் வல்லீயாயுதம் வனஜலோசன மேகவக்த்ரம்
வந்தா மஹே வனஜ ஸம்பவ சாஸிதாரம் !! —குமாரதந்திரம்.

(தொடரும்).

பொன்மொழிகள்.

(3) சாந்தமான மனதிற்கு எந்த இடமும் அரண்மனையே; எந்த இடமும் பூங்காவனமே.

(4) உலகில் பெரியார் ஒருவர் தோன்றினல் அவரை நாம் அறிந்துகொள்வதற்கு அறிகுறியாகிய அடையாளங்கள், முட்டாள்கள் அனைவருங்கூடி அவருக்கு விரோதமாக வேலை செய்வதே.

(5) தரையோடு தரையாக நசுக்கினுலும் உண்மையெழுந்தே நிற்கும்.

(6) நம்முடைய அறியாமையின் ஆழத்தை உற்றுநோக்குவதும், நம்முடைய அறிவைத் தூய்மை செய்வதும், தத்துவஞானத்தின் தொழில்.

(7) மனம் ஒரு பெட்டியை ஒக்கும்; ஒழுங்காக அடுக்கினல் எல்லாப் பொருள்களையும் அடுக்கிவிடலாம். ஒழுங்கின்றேல் எதை வைப்பதும் அரிதாகிவிடும்.

நா. சௌந்தரபாண்டிய சிவனர்,
சிற்பவல்லுனர், துறையூர்.

உ

ஓம் குஹாய நம:

கற்பு

(367-வது பக்கத் தொடர்ச்சி)

மறுநாள் அரசனுடைய கட்டளைப்படி யமதூதர்களைப்போன்ற நான்கு கொலையாளிகள் மங்கலவதியிடம் வந்து, அரசனது ஆணையைக்கூறி கொல்லுவதற்காக குழந்தையைக்கேட்டார்கள். மங்கலவதி உடல்பதறி, "அம்மா! என் கண்ணே! கொலைசெய்யுமாறு மன்னர் கட்டளையிட்டனரே! உயிருடன் உன்னை எவ்வாறு கொலைஞர் கரத்திற் கொடுப்பேன். என்னையும் கொலைசெய்யுமாறு கட்டளையிட்டிருந்தால் நன்றாக இருந்திருக்குமே! ஐயோ! தெய்வமே! இதுவும் நின் திருவிளையாடலோ? பத்துமாதம் சுமந்து பெற்று வளர்த்து அருமை மகளைக் கொல்லுமாறு எந்தத் தாய்தான் கொடுப்பாள்? மறுத்தால் என் பதியின் கட்டளையை மீறினவளாக ஆவேன்; கட்டளையை நிறைவேற்றுவதே பெண்களுடைய கடமை" என்று பலவாறு புலம்பி, குழந்தையை எடுத்து பலகாலும் முத்தமிட்டு முகத்தோடு முகஞ்சேர்த்து கண்ணீரால் நனைத்து கொலைஞர் கையிலே கொடுத்துவிட்டு உள்ளறையிற் சென்று மூர்ச்சையாயினள். கொலைஞர்கள் குழந்தையைக் கொண்டுபோய்விட்டார்கள். மங்கலவதி தன் குழந்தையை நினைந்து நினைந்து நெஞ்சம் புண்ணுவாள்; தன் விதியை நொந்து கலங்குவாள்; குழந்தையைப் பறிகொடுத்த தாய்களுக்கல்லவா அந்தத் துக்கம் தெரியும். ஆனல் கற்பிற் சிறந்த மங்கலவதி பதியினிடத்தில் ஒருசிறிதாவது வெறுப்புகொள்ளாமல் முன்னையிலும் பன்மடங்கு அதிகமாக பக்திசெய்துவந்தாள். பதிக்கு வேண்டியவைகளைக் குறிப்பறிந்து செய்து மகிழ்வித்துவந்தாள்.

நாள் பல சென்றன. ஜனங்கள் மன்னனை நிந்தித்தார்கள்; இடைச்சியை மணந்தது ஒரு குற்றம்; குழந்தையைக் கொன்றது ஒரு குற்றம் என்று குறைகூறினர்கள். மங்கலவதி மீளவும் கருவுற்றாள். நல்ல சுபதினத்தில் ஓர் ஆண்மகவை யீன்றெடுத்தனள். முன்னர் குழந்தையை இழந்த துன்பத்தை ஒருவாறு மறந்து, பிறந்த குழந்தையை அளவுகடந்த அன்புடன் வளர்த்துவந்தாள். மழலை

மொழியால் பாலன் மாதாபிதாக்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தான். ஜனங்கள் இடைக்கோனனுடைய பேரன் உலகமாளப்போகிறுன் என்று பேசிக்கொண்டார்கள். அச்சொல் மன்னன் செவிக்கு வந்தது. மன்னன் மனைவியிடத்தில் வந்தான்; மங்கலவதி கணவனைக் கண்டு எழுந்து வணங்கிநின்றுள். "மங்கலவதி! முன்னைவிட என்னை என் குடிகள் வெறுக்கின்றுர்கள்; "இடைச்சி பிள்ளையா அரசாள்வது?" என்று நிந்திக்கிறுர்கள். என் மகன் உயிரோடிருந்து இந்தப் பழியைச் சுமந்துவாழ்வது எனக்குப்பிடிக்கவில்லை; ஆதலால் மகனைக் கொன்றுவிடுவதே நலமென்று கருதியுளேன்; நாளைக் காலை கொலைஞர்கள் வருவார்கள்; அவர்கள் கையில் மகனைக் கொடுத்துவிடு" என்றுன். மங்கலவதி இடியைக்கேட்ட நாகம்போல் நடுங்கி "நாதா! தங்கள் சித்தம், என் பாக்கியம்; "நிதியுங் கணவனும் நேர்படினும் தத்தம் விதியின் பயனேபயன்" என்ற மூதுரைப்படி என் விதியை மாற்ற யாரால் முடியும்; தங்கள் திருவுளத்திற்கு எது நலமென்று தோன்றுகிறதோ அதை அப்படியே செய்யலா"மென்று கூறினுள். மன்னன் அந்த இடம்விட்டு தனி இடம் போனுன்.

அடுத்த நாள் முன்னே வந்த கொலைஞர்கள் நால்வரும் வந்து மகாராணியை வணங்கி, "அம்மா! தங்கள் புதல்வனைக் கொன்று விடும்படி மகாராஜா கட்டளையிட்டிருக்கிறுர்; பிள்ளையைத் தருவீர்" என்றுர்கள். மங்கலவதி அங்கங்குலைந்து, மகனை எடுத்தணைத்து மகனே! இன்னும் உனக்கு ஓராண்டுகூட நிறையவில்லையே; ஆண்டு நிறைவிழா செய்யலாமென்று எண்ணியிருந்தேனே? அந்தோ! என் பாவம் உன்னையுந் தொடர்ந்ததுபோலும்? முன் உன் சகோதரியும் முலைப்பால் குடிக்கும் பருவத்தில் கொலைசெய்யப்பட்டாள்; இப்போது நீயும் அக்கதியை யடையப் போகின்றுய்; முன்னே சந்தனுவின் மனைவியாகிய கங்கை எவ்வாறு குழந்தைகளைப் பிறந்தவுடனே கொன்றுளோ அதுபோல் நானும் இரு குழந்தைகளைப் பெற்று கொன்று இறகொடிந்த பறவைபோல் தவிக்கலானேன்; அரசாளப்பிறந்த நின் தலையில் கொலையுண்டு மடிய அயன் விதித்தனன்போலும்; ஐயோ! இதற்கா நான் பெண்ணுகப்பிறந்தேன்? பெண் ஜென்மம் மிகக்கொடிது; கொடிது; ஆண்டவனே! என்னைப் போன்ற பெண்கள் இதுபோன்ற துன்பத்தை யனுபவிக்காமலிருக்க வேண்டும்;" என்று கதறியழுது குழந்தையின் மெல்லியதாடைகள் இரண்டிலும் மாறிமாறி முத்தமிட்டு கொலைஞர் கரத்தில் கொடுத்து

விழுந்து மூர்ச்சித்தாள். கொலைஞர்கள் பிள்ளையை வாங்கி அரசன் கட்டளையை நிறைவேற்ற நீங்கினார்கள். பாங்கிமார்களால் மங்கலவதி தேற்றப்பட்டாள்.

மங்கலவதி துன்பத்தையெல்லாம் உள்ளுக்குள் அடக்கிக்கொண்டு தன் பதிக்கு எல்லா வகையாலும் சந்தோஷத்தை விளைவித்து சிறிதாவது அன்பு குறையாமல் பயபக்தியுடன் ஒழுகிக்கொண்டுவந்தாள். ஊரார் இன்னும் அதிகமாக மன்னனைக் குறை கூறினார்கள். மன்னன் பின்னொரு நாள் மனைவியிடம் வந்து, "பெண்ணே நீ இடையன் மகளென்றும், என் பத்தினியாயிருக்கத் தகாதவளென்றும் சிலர் கூறுகிறார்கள்; ஆதலால் இனி நீ அரண்மனையிலிருக்கப்படாது; மாட்டுத்தொழுவத்தில் வேலைக்காரியைப் போல் இருந்து வருவாய்" என்றான். மங்கலவதி கேட்டு மிகவும் மகிழ்ச்சியுடையவளாய் கணவனை வணங்கி, "நாயகரே! அன்பின் உறைவிடமே! தங்கள் உத்தரவே என் பாக்கியம்; நான் என்றும் தங்கள் வேலைக்காரியே; நான் இடைச்சி என்பதில் ஐயமில்லை; மாடு ஆடுகளுடன் இருந்து பழகியவளே; இன்னும் இதைவிடத் தாழ்ந்த இடத்தில் என்னைத் தாங்கள் வைத்தாலும் எனக்குத் திருப்தியே. ஆனால் என் மனத்தில் தங்களிடமுள்ள அன்பைக்குறைக்க தங்களால் முடியாது; தங்களைத் திருப்திசெய்வதே என்னுடைய பெரிய கடமை; தாங்கள் எனக்குக்கொடுத்த கட்டளையைப் பெரிய பாக்கியமாக எண்ணி மகிழ்வேன்; அப்படியே இந்த நிமிஷத்திலிருந்து மாட்டுத்தொழுவத்தில் வேலைக்காரியாக இருந்து தங்கள் ஆணையைச் சென்னிமேற்கொண்டு நிறைவேற்றுவேன்" என்று இனிமையாக மொழிந்து செய்கையிலும் அப்படியே காட்டினாள். அவளுடைய பொறுமையின் பெருமையே பெருமை. மகாராணியாயிருந்தபோது எப்படி சந்தோஷத்துடனிருந்தாளோ அப்படியே இப்போதும் மாட்டுக்தொழுவத்தில் மகிழ்ச்சியுடனிருந்தாள். மகளையும் மகனையும் நினைத்து சில சமயங்களில் வருந்துவாள். ஆயினும் கணவனிடத்தில் அன்பு குறையாது நாயகனுக்கு வேண்டியவற்றைச் செய்துவந்தாள்.

ஆண்டுகள் பல சென்றன; மன்னன் ஒருநாள் மாட்டுத்தொழுவஞ் சென்றான்; மங்கலவதி விரைந்து பார்த்திபன் பாதபங்கயங்களின்மேல் வீழ்ந்து பணிந்தாள். பிரதாபசீலன் "மங்கலவதி! எழுந்திரு; நான் ஒரு கன்னிகையைக் கல்யாணஞ் செய்துகொள்ள விரும்பியிருக்கின்றேன்; நீ மூத்த மனைவி; உன்னுடைய அனுமதி

யின்றி செய்துக்கொள்வது தருமமல்ல ; ஆதலால் நின் விருப்பம் யாது ?" என்றான். மங்கலவதி, " தருமசீலரே ! தீனதயாளரே ! தங்களுக்கு எது விருப்பமோ அதுவே எனக்கும் விருப்பம்; தாங்கள் மறுமணஞ் செய்துகொண்டு பத்தினியுடன்கூடி இன்பத்தை நுகர்வது எனக்கு மிகவும் மகிழ்ச்சியே ; தங்களுக்கு வந்த மகிழ்ச்சி என்னுடைய தல்லவா? அப்படியே செய்துகொள்ளும். ஆனால் தாங்கள் எனக்கு " ஒரு வரந்தரல் வேண்டும் " என்றாள். மன்னன், "யாது வரம் வேண்டும் " என்றான். நாதா ! " இன்னொரு கன்னிகையைக் கல்யாணம் செய்துக்கொண்டு, அந்த மனைவியாகிய என் தங்கையை என்னை நடத்தியதுபோல் நடத்தாமலிருக்கவேண்டுகிறேன் " என்று கண்கலங்கிக் கூறினாள். இவ்வசனத்தைக்கேட்ட மன்னனால் யாதொன்றும் பேசமுடியவில்லை; அவன் மனங் குழம்பி விட்டது ; அவ்விடத்தைவிட்டு நீங்கினான்.

கல்யாண நாள் நெருங்கிற்று, நகரை யலங்கரித்தார்கள்; நம்மரசனுக்கு இத்தனை வயதிற்குமேல் எதற்கு விவாகம்? கல்யாணப்பெண் எந்த ஊர்? ஒன்றுந் தெரியவில்லை என்று பலவாறு ஜனங்கள் பேசிக்கொண்டார்கள். கல்யாண தினத்தன்று திரளான கூட்டம்; வசந்தமண்டபத்தில் கல்யாணம் ; அங்கு அரசர்கள், அரச குடும்பத்தார்கள், அறிஞர்கள் பலரும் கூடியிருந்தார்கள். மங்கலவதி, மிக்க மகிழ்ச்சியுடன் விவாகத்திற்கு வேண்டியவற்றைச் செய்துகொண்டிருந்தாள். முகூர்த்த நேரம் நெருங்கியது ; மங்கைப்பருவம் வாய்ந்த அழகுள்ள ஒரு இராஜ கன்னிகை முத்துப் பல்லக்கின்மீது வசந்த மண்டபத்தை நாடி வந்துகொண்டிருந்தாள் ; அவள் பக்கத்தில் ஒரு இராஜ குமாரன் கரத்தில் பாரித்த வில்லைப்பிடித்து மன்மதனே உருவுடன் வந்தாப்போல் பஞ்சகல்யாணி குதிரையின்மீது வந்துகொண்டிருந்தான். அவர்கள் இருவருடைய அழகையும் கெம்பீரத்தையும் கண்டோர் யாவரும் அதிசயித்துப் பின்தொடர்ந்து வந்தார்கள். இவள்தான் அரசன் மணக்கப்போகும் இராஜ கன்னிகை; இவன் இவளுடைய தம்பி ; என்று குறிப்பினாலுணர்ந்து பேசிக்கொண்டார்கள். வசந்தமண்டபம் வந்தவுடன் அரசன் அவர்களை எதிர்கொண்டழைத்து இரண்டு ஆசனந்தந்து அதில் இருக்கவைத்தான். மன்னன் மங்கலவதியை யழைத்து " முகூர்த்தகாலம் வந்துவிட்டது ; இந்தப் பெண்ணை மங்களஸ்நானஞ்செய்து அழைத்துவா " என்றான். இந்த இடத்தில் எவ்வளவுதான் பொறுமை யிருந்தாலும் மனம்

வருந்தி பெண்கள் பொறுமையை யிழந்துவிடுவார்கள். மங்கலவதி சிறிதாவது மனத்தில் வருத்தங்கொள்ளாது மகிழ்ச்சியுடன் அந்த அரசகுமாரியை அழைத்துக்கொண்டுபோய்நீராடுவித்து அலங்கரித்து அழைத்துக்கொண்டுவந்தாள். எள்ளிட இடமின்றி திரளான கூட்டம் நிறைந்திருந்தது; மங்கலவாத்தியங்கள் முழங்கின; வேதியர் வேதங்களை ஓதினார்கள்; அந்த சமயத்தில் மன்னன் ஓர் உயர்ந்த இடத்தில் நின்று ஜனங்களை நோக்கிக் கூறுவானாயினான்.

"மகா ஜனங்களே! அரசவம்சத்திற் பிறந்த அறிஞர்களே! அமைச்சர்களே! எல்லோரும் கேண்மின்கள். சென்ற பதினைந்து ஆண்டுகளாக ஒரு பெரிய இரகசியத்தை உங்களிடம் மறைத்துவைத்தேன்; இப்பொழுது அதனை வெளியிடுகின்றேன். கற்பிற் சிறந்த காரிகையாகிய மங்கலவதியை மணந்துகொண்டதற்காக நீங்கள் வருந்தினீர்கள்; குலத்தை எண்ணிக் குறைகூறினீர்கள்; குணத்தை நீங்கள் பொருள்படுத்தவில்லை; மாதர்கள் திலகமாகிய மங்கலவதி வயிற்றில் முதலில் ஓர் பெண்மகவு தோன்றியது; அதனைக் கொல்வதற்குக் கேட்டேன்; அவள் தடை செய்யாது கொடுத்துவிட்டாள். பின் ஆண்குழந்தை பிறந்தது; அதையுங் கொலைக்களத்திற்கு அனுப்பினேன்; அப்போதும் மங்கலவதி என்னிடத்தில் அன்பு குறையாது பொறுமையுடன் இருந்தாள். பின் இவளை மாட்டுத்தொழுவத்தில் வேலைக்காரியாக இருத்தினேன்; அப்பொழுதும் இவள் களிப்புடன் என்னை நேசித்தாள். சக்களத்தி வருகிறாள் என்று சொன்னால் எத்தகைய உயர்ந்த மாதரும் மனங்கசிந்து வாடுவார்கள். நான் மறுமணம் செய்ய எத்தனித்தேன்; அதற்கும் இவள் ஒத்துக்கொண்டு தானே விவாகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தாள். நான் இத்தனை கொடுமைசெய்தும் என்னைக் கடவுளாக எண்ணி என்னை அன்புடன் நேசித்தாள். இப்போதும் அன்புடன் இருக்கின்றாள்; இவளை எந்தக் குலத்திற் சேர்ப்பது? எக்குலத்திற் பிறந்தாலுமென்? குணமல்லவா உயர்ந்தது?

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்

என்ற தெய்வப்புலவர் திருவாக்கின்படி ஒழுக்கத்திற் சிறந்தவரே உயர்ந்தோராவர். கண்ணப்பர், திருநாளைப்போவார் முதலியோரை எந்தக் குலத்திற் சேர்ப்பது? குணத்தில் உயர்ந்தவரே உயர்ந்தவராவர்; எக்குலத்திற் பிறந்தாலும் நற்குண மில்லையேல் அவர்கள் தாழ்ந்தவரே யாவர்; ஆதலால் "என் கண்மணியாகிய மங்கலவதியே

உயர்குலத்தாள்" என்று பத்தினியாகிய மங்கலவதியை மார்போடணைத்து, "மாதர் மணியே! கட்டிக்கரும்பே! நான் இதுவரையில் உன்னைச் சோதித்ததற்காக நீ என்னை மன்னிக்கவேண்டும். இதோ இப் பெண்தான் உன் சீமந்தபுத்திரி; இந்த வீரன்தான் உன்னுடைய செல்வக்குமாரன். இன்றுதான் உன் மகனுக்கு இளவரசு சூட்டுகின்ற நாள்; உன் பொறுமைக்குணத்தின் உயர்வையும், கற்பின் உறுதியையும் உலகிற்கு வெளிப்படுத்தவே இவ்வாறு செய்தேன். கண்மணியே! நீ வருந்தாதே; என் பிள்ளைக்கும் பெண்ணுக்கும் பிற்காலத்தில் இழிவுச் சொல் ஏற்படாமலிருப்பதற்காகவே இவ்வளவுஞ்செய்தேன்" என்று சொல்லிமுடிக்கு முன்னரே மங்கலவதி அதியற்புதமடைந்து, தன்னை மறந்து, மகளையும் மகனையும் கட்டித் தழுவிக்கொண்டு, துன்பக்கண்ணீரும் இன்பக்கண்ணீரும் மாறிமாறி வடித்து, "குழந்தைகளே? உங்களைப் பெற்றும், வளர்க்கும் பாக்கியஞ்செய்யாத பாவியானேன்; கிருஷ்ணனைப் பெற்றும் வளர்ப்பதற்குப் புண்ணியஞ் செய்யாத தேவகியைப்போலானேன்; உங்கள் மதலைச்சொற்களைக்கேட்டு உங்கள் விளையாட்டைக்கண்டு ஆனந்திப்பதற்குத் தவஞ்செய்யாமற் போனேன். கண்மணிகளே! கொலைக் களத்திற் கொலையுண்டு நாய்நரிகளுக்கு இரையானீர்கள்'' என்று எண்ணி எண்ணி இதயந்துடித்தேன், இன்று உங்களைக்கண்டு மகிழ எம்பெருமான் திருவருள் புரிந்தார்" என்று வாய்விட்டுப் புலம்பினாள். அக்காட்சியைக்கண்ட எல்லோருடைய மனமும் உருகி நீரானது. மங்கலவதியைக் கற்புக்கரசியென்றும், பெண்தெய்வமென்றும் பொறுமையின் பொக்கிஷமென்றும், போற்றிப் புகழ்ந்தார்கள். மன்னவனது அற்புதச்செயலை யுன்னியுன்னி உள்ளம் பூரித்தார்கள். குறித்தகாலத்தில் அவ்விராஜகுமாரனுக்கு இளவரசு பட்டாபிஷேகம் நடைபெற்றது. மங்கலவதி மணவாளனோடும் மக்களோடும் உலகம் புகழ சுவர்க்கலோகத்தில் இந்திராணி வீற்றிருப்பதுபோல் இனிது வாழ்ந்தாள்.

சகோதரிகளே! நன்றாக இதனைச் சிந்தியுங்கள். மங்கலவதியின் உத்தமகுணத்தைக் கடைப்பிடியுங்கள்; நீங்களும் கற்பின்வடிவமாக, பொறுமைப்புதையலாக, சாந்தத்தின் சாகரமாக சிறந்து விளங்குங்கள்; என்றுமழியாத இன்பத்தை நுகர்மின்கள்; இங்ஙனமாக "தினைவனங்கிளிகாத்த சவுந்தரி" திருவருள் புரிவாராக.

(தொடரும்).

ஓம் குஹாய நம:

அறம்

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு

—திருக்குறள்.

ஒருவனுக்கு அறஞ்செய்தலின் மேற்பட்ட ஆக்கமுமில்லை; அவ்வறத்தை மயக்கத்தால் மறத்தலின் மேற்பட்ட கேடுமில்லை என் மேற்போந்த பொய்யாமொழி தெரிக்குமாற்றால், உயர்ந்த நிலையைப் பெற விரும்பும் ஒவ்வொருவனும் அறஞ்செய விரும்புவது அவசியமாகும். எல்லோரும் விரும்புவது இன்பத்தையே; அவ்வின்பம் இருதிறப்பட்டன. ஒன்று இம்மை இன்பம்; மற்றொன்று மறுமை இன்பம். தனம், தான்யம், மனை, மக்கள், புகழ், ஊர்தி, இருக்கை முதலியவைகளால் உண்டாகுவது இம்மை இன்பம்: சுவர்க்காதியுலகங்களில் உண்டாகுவது மறுமை இன்பம். இவ்விரண்டு இன்பங்களும் அறத்தால் உண்டாகின்றன என்னில் அறத்தை யார்தான் விரும்பார்கள்? விரும்பப்படுவது அறம் ஒன்றேயாம்.

சிறப்பீனுஞ் செல்வமு மீனும் அறத்தினூஉங்
காக்க மெவனோ உயிர்க்கு

—திருக்குறள்.

மனிதனாகப் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் புகழைப் பெற வேண்டும். "தோன்றில் புகழொடு தோன்றவேண்டும்; அவ்வாறு புகழொடுதோன்றாதார் தோன்றுவதினும் தோன்றாமலிருத்தலே நன்று" என்பது தெய்வப்புலவாது கருத்தன்றோ? அப்புகழை, கல்வியாலும், செல்வத்தாலும், வீரத்தாலும், அழகினாலும், சமர்த்தாலும், ஆராய்ச்சியாலும் இன்னோரன்ன பிறவற்றாலும் பெறலாமெனினும், வறியவர்க்கு உணவு உடை முதலியவற்றைக் கொடுத்தலாகிய அறத்தால் வருவதே சிறந்த புகழாம். அப்புகழே மனிதர்க்குச் சிறந்த ஊதியமாம்.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு

—திருக்குறள்.

இத்தகைய அறத்தை நாம் கடைப்பிடித்து ஒழுகவேண்டும். எவன் ஒருவன் பிறந்து ஒரு சிறிதாவது தருமஞ் செய்யவில்லையோ அவன் பிறந்தும் பிறவாதவனே; அவன் பிறப்பு பயனற்றது. அத்தருமம் உத்தமம், மத்திமம், அதமம் என்று மூன்றுவகைப்பட்டுளது. தானே கொண்டுபோய்க் கொடுத்த தருமங்களுக்கு உத்தமமான பயன்; கூப்பிட்டுக்கொடுத்த தருமங்களுக்கு மத்தியமமான பயன்; தன்னைவந்து யாசிப்பவனுக்கு கொடுத்த தருமங்களுக்கு அதமமான பயன். இம்சைக்குப் பயந்தும், அதிகாரத்திற்குப் பயந்தும், தொந்தரைக்கும் கொடுக்கப்பட்டது தருமமாகமாட்டாது. தமோகுணமுள்ள சித்தத்துடன் கொடுத்த தானத்தின் பயனைக் கர்ப்பத்திலிருக்கும்போது அநுபவிக்கிருன். எந்தமனிதன் ஈர்ஷையும் மாத்சரியமுமுள்ளவனுகி டம்பத்திற்காகவும், பொருளுக்காகவும் தானஞ்செய்கிருனே அவன் அந்தத் தானபலனைக் குழந்தைப்பருவத்தில் அனுபவிக்கிருன். எந்த மனிதன் நோய்களால் வருந்தி மிகவும் அசக்தனுகி போகத்தை அனுபவிக்கமுடியாமல் தானஞ்செய்கிருனே அவன் அந்தப்பயனை முதுமைப்பருவத்தில் அனுபவிக்கிருன். எந்த மனிதன் நீராடி பரிசுத்தனுகவும், தெளிந்த மனத்தையுடையவனுகவும் இருந்துகொண்டு சிரத்தையுடன் தானஞ்செய்கிருனே அவன் அதன்பயனை யௌவனத்தில் மகிழ்ச்சியுடன் இனிது அனுபவிக்கிருன். ஆதலால் அறஞ்செய விரும்பும் அன்பர்கள் தம்மால் இயன்ற அளவு மேற்கூறியபடி அன்புடனும் சிரத்தையுடனு மிருந்துகொண்டு தூய எண்ணத்துடன் தருமஞ் செய்யவேண்டும்.

இதுவேயுமன்றி சத்துவம், இராஜஸம், தாமஸம் என மூன்றுவிதமாக தானத்தையும், தானத்தின் பயனையும், கதியையும் ஆன்றோர்கள் பிரித்துள்ளனர். அவற்றையும் நாம் அறிந்துகொள்ளுதல் அவசியம். அன்பர்களே! அவசியம் கொடுக்கவேண்டுமென்று எண்ணி முன் தனக்கு ஒரு உபகாரமுஞ் செய்யாதவனுக்குப் பிரதியுபகாரங் கருதாது செய்யப்படுகின்ற தானம் சத்த்வமாம். அறிவுநூல்களைக் கற்றவனும் அநேகரைக் காப்பாற்றுகின்றவனுமான உத்தமனுக்கு அன்புடனும் மகிழ்ச்சியுடனும் கொடுக்கப்படுகின்ற தானம் சத்துவமாம். அறிவுநூல்களைக் கல்லாதவனுக்கும், முன் உபகாரஞ்செய்தவனுக்கும், செல்வம் நிறைந்தவனுக்கும் கொடுக்கப்பட்ட தானம் இராஜஸமாம். உறவினனுக்கும், குடியன், பித்தன், நித்தியகர்மாநுஷ்டானத்தை விட்டவன் முதலியவர்க்கும், பாத்திரமல்லாதவனுக்

கும், பயனைக்கருதிக் கொடுக்கப்பட்ட தானம் இராஜஸமாம். வைச்வ தேவஞ் செய்யாதவனுக்கும், கல்வியறிவு சிறிது மில்லாதவனுக்கும், திருடனுக்கும் கொடுக்கப்பட்ட தானம் தாமஸமாம். கோபத்துடன் கொடுக்கப்பட்டதும் சேவகனுக்குக் கொடுக்கப்பட்டதுமான தானமானது தாமஸமாம்.

சாத்விகமான தானத்தை தேவர்களும் முனிவர்களும் அக்கினிகளும் புசித்து மகிழ்கின்றார்கள் பிதிர்களாலும் தேவர்களாலும் விலக்கப்பட்ட தாமஸமான தானத்தை, தானவர்களும் தைத்தியர்களும் கிரகங்களும் யக்ஷர்களும் இராக்கதர்களும் புசிக்கின்றார்கள். தாமஸமான தானத்தை, அழுக்குள்ள பாபிகளான பிசாசங்களும் பிரேதக்கூட்டங்களும் புசிக்கின்றன சாத்விக தானங்களுக்கு உத்தமமான பயனையும், இராஜஸமான தானங்களுக்கு மத்தியமமான பயனையும், தாமஸமான தானங்களுக்கு அதமமான பயனையும் அடைவார்கள். அவ்வாறே கதிகளையும் அடைவார்கள்.

கொடுப்பவனுடைய பாவமானது பெற்றுக்கொள்பவனை யடைகிறது. பெற்றுக்கொள்ளுகின்ற புண்ணியமானது கொடுப்பவனை யடைகிறது. காசி இராமேச்சுரம் முதலிய திருத்தலங்களைத் தெரிசித்தும், கங்கை காவிரி முதலிய புண்ணிய நதிகளில் நீராடியும் வந்த உத்தமர்களை உபசரித்து ஒருவேளை உணவு கொடுப்பதால் இருந்த இடத்தில் இருந்துகொண்டே அவர்களுடைய புண்ணியத்தில் பங்கு எடுத்துக்கொள்ளுகிறான். ஆதலால் பரலோகத்தில் நன்மையை விரும்புகிறவன் எப்பொழுதும் தானஞ்செய்யவேண்டும்.

எந்தத் தருமத்தைச் செய்பமுடியவில்லையானாலும், தண்ணீரையாவது தாகவிடாய்கொண்டவர்க்கு அன்புடன் கொடுத்து உபசரிக்க வேண்டும். தண்ணீர்ப்பந்தல்வைத்து உயர்ந்த பதவியை யடைந்தவர் எண்ணிலர் அப்பூதியடிகள் தண்ணீர்ப்பந்தல் வைத்து என்றுமழியா இன்பத்தை யடைந்தனரன்றோ? ஒருவன் ஒரு பசுவுக்கு ஒரு நாள் தண்ணீர்கொடுத்து அதனையுபசரித்தால் அவன் முன்னோர்களாகிய எழு தலைமுறையைக் கரையேற்றுகிறான் உலகத்தில் உயிர்களுக்குத் தண்ணீரே மேலான ஜீவனமாம். விடாய்கொண்டவனுக்குத் தண்ணீரைக் கொடுத்தவுடனே உடலும் உயிரும் குளிர்ந்து திருப்தியுண்டாகிறது. தண்ணீரின் குணங்கள் தெய்வீகமானவைகளும் பர லோகத்தில் நன்மையைக் கொடுக்கின்றவைகளுமாக இருக்

உ

கார்த்திகேயன் துணை.

கொல்லாமை

சச்சிதானந்தம்.

கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பராபரமே
— தாயுமானவர்.

உலகத்தில் மக்களாகப்பிறந்த நாம் ஒவ்வொருவரும், எல்லா ஜீவராசிகளுக்கும் பரமபிதாவாகிய வல்லீதேவசேனைகாந்தனுடன் இரண்டறச் சேருகின்ற வழியைத் தெரிந்துகொள்ளவேண்டும். நம் பெரியோர்கள் கடிதில் கடவுளைக் காணும் வழியை யறிந்திருந்தனர். அவ்வழிதான் கொல்லாமையாகும். கொல்லா விரதத்தைக் கடைப்பிடித்த பெரியோர்கள் கடவுளைக் காணவேண்டுமென்று ஆசைப்படார்; ஏனெனில், மாலயனும் தேடித்தேடிக் காணொணாத கடவுள் கொல்லா விரதிகளைத் தேடி சதா தெரிசனம் தருகிறார்; "கொல்லா

கின்றன. யமலோகத்தில் புஷ்போதகி யென்னும் மிக்க பரிசுத்தமான ஒரு நதியிருக்கின்றது. அந்நதியானது தண்ணீரைக்கொடுத்தவர்களுக்கு விரும்பியவற்றைக் கொடுக்கிறது. அந்நதியில் குளிர்ந்ததும் குறைவற்றதும் அமிருதத்போன்றதுமான தண்ணீர் இருக்கின்றது. அது குளிர்ந்த நீரைக் கொடுத்தவர்களுக்கு எப்பொழுதும் சுகத்தை உண்டுபண்ணுகிறது. தண்ணீர் தானஞ்செய்யாதவர்களுக்குச் சீழைக் கொடுக்கின்றது. தண்ணீரைக்குடித்தால் தாகமும் பசியும் தீருகின்றது. தாகமுள்ளவனுக்கு அன்னத்தைப் புசித்தால் தாகந்தீருகின்றதில்லை. ஆதலால் தெரிந்தவன் எப்பொழுதும் தாகமுள்ளவர்களுக்குத் தண்ணீரைக் கொடுக்கவேண்டும். தண்ணீரானது அக்கினியின் வடிவமும் பூமிக்குக்காரணமும் அமிருதத்திற்கு உத்பத்திஸ்தானமுமாக இருக்கிறது ஆகையால் தண்ணீரானது எல்லா வுயிர்களுக்கும் ஆதாரமென்று அறிஞர்கள் கூறுகின்றார்கள். எல்லாவுயிர்களும் தண்ணீரால் உண்டாகின்றன; தண்ணீரால் உயிர் வாழ்கின்றன; ஆதலால் எல்லாத் தானங்களிலும் தண்ணீர்த்தானம் மேலானது. யாவரும் செய்யலாம். எல்லாத் தானங்களாலும் தவங்களாலும் யாகங்களாலும் உத்தமமான எந்தப் பயனை யடையலாமோ அவைகளனைத்தையும் தண்ணீர்த் தானத்தால் அடையலாம்.

(தொடரும்).

விரதியர் நேர் நின்ற முக்கட்குருமணியே" என்றனர். ஆகவே கொல்லாமைதான் சிறந்த தருமம்; கொல்லாமைதான் சிறந்த சத்தியம்; கொல்லாமைதான் சிறந்த தவம்; எல்லா உயிர்களும் ஆண்டவனுல் படைக்கப்பட்டவை; சர்வஜீவராசிகளுக்கும் முருகக்கடவுள் தாயும் தந்தையுமாக விளங்குகின்றனர். சுருதிகளாலுங் காணமுடியாத கடவுள் சர்வ உயிர்களிடத்திலும் அணுவுக்கு அணுவாகவும், பெரியதற்குப் பெரியதாகவும் நின்று நிலவுகிருர். ஆகவே எவ்வுயிர்களும் கடவுள் நிவாசம் செய்யும் கோயிலாகும், யாதாயினும் ஒரு உயிரைக் கொல்லுவதினுல், அரன்கோயிலை யிடித்ததுபோலொக்கும். ஒருவன் நூறு வருடம்வரை தினமும் யாகத்தைப்புரிந்திருந்தால் எத்துணைப் புண்ணியம் உண்டாகுமோ அப்புண்ணியம் கொல்லா விரதத்திற்குச் சமமாகாது.

அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணுமை நன்று

என்பது உத்தரவேதம். கொல்லாமையைத் தவிர்த்து மற்ற தருமங்கள் செய்வது நிஷ்பலமே யாகும். கொல்லாமையென்னும் தருமந்தான் முதன்மையாக விளங்குகின்றது. தன்னுயிர்க்கே ஆபத்து வந்தபோதிலும் பிறவுயிருக்குத் துன்பம் செய்யக் கருதவும்படாது.

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை"

என்று பொய்யாமொழியில் கூறப்பட்டுளது. நமக்குக் கீழ்ப்படிந்த எளிய மிருகங்களை வலியராகிய நாம் இம்சித்தால், நம்மை இம்சிக்க ஒருவன் தோன்றுவான். நம்மைப்போல் ஆடு மாடு மிருகாதிகளும் ஒரு உயிர்களல்லவா? சரீரத்தால் வேறுபாடே தவிர ஆன்மா ஒன்றுதான்.

அந்தோ! திக்கற்ற ஏழைப்பிராணிகளை துன்புறுத்திக்கொல்லும்பொழுது அவ்வூமைப்பிராணிகள் வாயைத்திறந்து ஐயா! எங்களால் உபாதைப்பட முடியவில்லையே! என்று கூறுவதற்கும் வாயில்லையே? ஒரு உயிரைக் கொல்லும்பொழுது அம்மா! அம்மா! என்று வாயைத்திறக்கின்றதே? கண்ணீர்விட் டழுகின்றதே? வெட்டுண்ட உடல் எவ்வாறு துடிதுடிக்கிறது? உயிர் போகமுடியாமல் படபட வென்று பந்தடிப்பதுபோல் அதன் இருதயம் அடித்துக்கொள்ளுகின்றதாம். இந்தக் கோர சம்பவத்தைக்கண்டும் கொஞ்சமேனும் இரக்கமில்லாமல் சிலர் அதைப்பார்த்து சந்தோஷிக்கின்றனர். அவர்

கள் கல்நெஞ்சின் கொடுமைதான் என்னே! பறக்கும் புறா முதலிய பக்ஷிகளைக் கொண்டுவந்து, அவை பறந்துபோய்விடாமற்படிக்கு, அதனுடைய சிறகுகளை சிலர் முறித்துவிடுகின்றனர்; பாவம்! அச் சிறியபக்ஷிகள் பறக்கமுடியாமல் என்னமாகத் தவிக்குமோ? நமக்கு இரண்டு கால்களையும் வெட்டிவிட்டால் நாம் எவ்விதம் சிரமப்படுவோமோ அதுபோலல்லவா அப்பக்ஷிகளும் துன்பப்படும்? தீவினையாகிய உருவிற்கு தலை கொலையல்லவா? கொலையென்றால் நம் குலை நடுங்கவேண்டாமா? அவ்விதம் நடுங்கினவனைக்கண்டு இயமனும் நடுங்குகின்றான். கொல்லா விரதிகள் பிற பாவம் செய்திருந்தாலும், அவற்றிற்குரிய தண்டனையை இயமதருமன் செய்ய நினைக்கும்போது உயிரொன்றையும் வருத்தாத தருமமுள்ள இவரது உயிரை யானெவ்வாறு வருத்தல் கூடும் என்று அஞ்சுகிறான்.

கொல்லாமற் கொன்றதையு முண்ணாம லிருப்பவர்க்குக் கூற்று மஞ்சும்
பொல்லாத பிணிகளும் அஞ்சும்

என்றனர் குமாரகுருபரதாசர்.

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று

— திருவள்ளுவர்.

எனவே கொல்லாமையால் இயமனையும் வெல்லலாம் என்று நன்கு விளங்குகின்றது. நமக்குத் துன்பஞ்செய்யும் பேன் மூட்டை முதலிய சிறிய உயிர்களைக் கொல்லுவதினால் பாபம் இல்லையென்று சிலர் நினைக்கின்றனர். அது மிகவும் தவறேயாகும். அவ்வுயிர்கள் உண்டாகாவண்ணம் நாம் நடந்துகொள்ளவேண்டும். துவரம்பருப்பு முதலிய வஸ்துக்களை அதிகம் சாப்பிடாமலிருந்தால் வயிற்றில் கிருமிகள் தோன்றா. கடுக்காய், கஸ்தூரிமஞ்சள், வேம்பின் வித்து, நெல்லிக்காய், மிளகு* ஆகிய இவைகளை பசுவின் பால்விட்டரைத்து பதமாக காய்ச்சி சிறிது சூடு இருக்கும்போதே எடுத்து தலையில் தேய்த்து ஸ்நானம் செய்தால் பேன் உண்டாகாது. உடம்பிற்கும் நன்மையுண்டாகும். வீட்டை அடிக்கடி தூய்மை செய்தால் மூட்டையுண்டாகாது. ஆகவே எல்லா வுயிர்களிடத்திலும் அன்பு செலுத்தல் வேண்டும். எக்காரணம்பற்றியும் யாதொரு உயிரையும் கொல்லப்படாது.

கடவுளுக்கு உயிர் பலியிடலாமா?

ஆனால் நம்பொருட்டு கொல்லாமல் தெய்வத்திற்காக பலியிடலாமா? ஒருசிலர் குலதெய்வத்திற்கு உயிர் பலியிடாவிட்டால் தெய்வம்

---

*மிளகு மற்றை நான்கின ளவினின்று ஐந்து பங்கு அதிகமாக உபயோகிக்க வேண்டும்.

கோபித்துக்கொள்ளும்; வியாதிகளை உண்டுபண்ணிவிடும் என்று கூறுகின்றனர். அவர்கள் பேதமையென்னே! சகல ஆன்மாக்களும் கடவுளுக்குக் குழந்தைகளல்லவா? யாரேனும் தன் குழந்தையை வெட்டச்சொல்வார்களா? கடவுளுக்கு மனிதர்களும் ஒன்றே, மற்ற மிருகங்களும் ஒன்றே. இதைத் தெரிந்துக்கொள்ளாமல் தெய்வத்திற்குப் பலியிடுகிற பொல்லாத தீச்செயலைச் செய்வது எப்படியுளதென்றால்: ஓங்கி எரியுந் தீபத்தோடு ஒரு கிணற்றில் எல்லா நலமுங்கெட விழுதலொக்கும். "எங்கள் தெய்வங்களாகிய காலில்லாத நொண்டி, கறுப்பன் முதலிய தெய்வங்களே பலி கேட்கிறது" என்கிறார்கள். அவைகட்குப் பலியிடவேண்டுமெனில் உங்கள் தெய்வம் உங்கள் பிள்ளையை வெட்டச்சொல்லி கூறினால் நீங்கள் புத்திரனை வெட்டுவீர்களா? ஐயோ! மாடன், கறுப்பன், எசக்கி, வழிமறித்தான், தூங்கிணி இவைகளும் ஒரு தெய்வமா? அவை யாவை? தாம் உயிரோடு இருந்தகாலத்து, செய்யாத தீச்செயலைச் செய்ததினால் அரசனாலும் பிறராலும் தண்டிக்கப்பட்டு தற்கொலைசெய்து உயிரிழந்த மனிதர்களின் பேய்வடிவங்களேயாகும். முருகப்பெருமானுடைய ஆணையால் பேய்வடிவங்களாய் அலைந்து திரியும் அவ்வாவிகளை வணங்குதலே குற்றமாகும். நம் இராமலிங்க அடிகள்

நலிதரு சிறியதெய்வ மென்றையோ
நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதா வாடு பன்றி குக்குடங்கள்
பலிக்கிடா முதலிய உயிரைப்
பொலிவுறக் கொண்டே போவதுங் கண்டே
புந்திநொந் துளநடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்
கண்டகா லத்திலும் பயந்தேன் என்றார்.

ஆகவே தெய்வத்திற்குப் பலியிடப்படாது. மிருகங்களை இம்சிக்கிறவனைக்கண்டு கூற்றாகாய் அதோ நின்று குறைக்கின்றது. அதையறிந்துகொள்ளவில்லை. இயமன் வருகிறானெனில் நாம் பயப்படுகின்றோம்; நாம் பிறவுயிர்களுக்கு எமனாக இருக்கின்றோம்.

"எவ்வுயிரு மறிவேன் றிசாதவ் வுயிர்க்கெலாம்
எமனா இருந்த துட்டன்
—குமாகுருதாசர்.

தன்னுயிரைப்போல் மன்னுயிரை எண்ணாமல்

கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லிடி காரர் வரிகயிற் றுற்கட்டி
செல்லிடு நீரென்று தீவாய் நரகிடை
நில்லிடு மென்று நிறுத்துவர் தாமே என்றும்

இந்நோய் நமக்குண்டேன் றெண்ணாதே யெவ்வுயிரு
முன்னேவக் கொன்றுண்ணு மூர்க்கர்தாம்—எந்நோவும்

பண்ணப் படுநரகிற் பாவிகளிற் பாவிகளேன்
றெண்ணப் படுவா ரிசைந்து என்றும்

சிலையி னுன்மாக்கள் கோன்று செழுங்கடல் வேட்டமாடி
வலையினுன் மீன்கள் வாரி வாழுயிர்க் கூற்றமான
கோலைஞரைக் கும்பி தன்னுட் கொந்தழ லழுத்தியிட்டு
நலிதுவர் நாளு நாளு நாகரை நாம வேலோய்

என்று முறையே திருமந்திரத்திலும் பெருந்தேவனார் பாரதத்திலும் சீவகசிந்தாமணியிலும் கூறியவாறு எமபுரத்தில் உயிர்க்கொலை புரிந்தவர்கள் படுகிற துன்பங்கள் எழுதப்புகின் இவ்வியாசம் அளவுகடந்து பெருகுமென்று எண்ணி விடுகின்றேம். அந்தோ ! உண்பதும் உறங்குவதும் உயிர்களைத் துன்பப்படுத்துவதே தன் பிறவியின் நோக்கமென்று எண்ணுகின்றனர் ஆ ! பசுவின்கன்றின் உயிருக்காகத் தன்னருமைப் புதல்வனின் உயிரை தேர்க்காலில் வீழ்த்திய மனு வாழ்ந்த நாடல்லவோ நம் தமிழ்நாடு ? ஒரு சிறு புறுவுக்காகத் தன் உடல் தசையெல்லாம் அறிந்துதந்த சிபிவாழ்ந்த நாடல்லவோ நம் பாரதநாடு ? இப்புண்ணிய பூமியிற் பிறந்தும் இத்துற்குணம் மாறவில்லையே ? குட்டிச்சுவருவது கழுதைக்கு ஒருவிதத்தில் உபகாரியாக இருக்கிறது; கழுதையின் வாலில் பனைவோலையைக்கட்டி தீயை வைக்கிறவன் குட்டிச்சுவரைவிட தாழ்ந்தவனுக அல்லவோ ஆகிருன். பாராசருடைய புத்திரர் அறுவர் சரவணப்பொய்கையில் மீன்பிடித்து விளையாடின தோஷத்தால் மீனுகப்பிறந்தார்களென்று கந்தபுராணத்தில் கூறுகிறது. விளையாடியதற்கே மஹா தவசிகளாகிய அக்குமாரர்கள் மீனுகப் பிறந்தார்களெனில் ஊசி (தூண்டி) யினுல் மீனேக் குத்திக்கொன்ருல் என்ன நாகம் கிடைக்குமோ ? நாம் ஒரு உயிருக்கு இதம் செய்யாவிடினும் அகிதம் செய்யலாமா ? நம் பெரியோர்கள் ஒரு உயிர் துன்பப்பட காணச்சகியார்கள். ஸ்ரீயத் விவேகாநந்தர் சகாராம் பண்டிதரிடத்தில்

" அன்பரே ! எனது ஜன்மபூமியில் ஒரு நாயுங்கூடப் பட்டினி கிடக்க நான் சகியேன் ; அதற்கும் உணவளித்து ரக்ஷிப்பதே எனது மதம் ; அதைத்தவிர மற்றவை யெல்லாம் மூடமதம் வேஷதாரிகள் நடிக்கும் மதம் " என்ருர்.

நாம் நாய்க்கு உணவளிக்காவிடினும், கற்களால் நாயை அடித்துக் கொல்லலாமா ? ஆகவே கொலையைத் தவிர்க்கவேண்டும்.

கொன்றதைத் தின்னுமை.

" கொன்ற பாவம் தின்ருற் தீரும் " என்பது பழமொழி இதன் கருத்தைத் தெரிந்துகொள்ளாமல் ஏதேதோ பிதற்றுகின்றனர். ஆகாரத்திற்கென்று கொல்லாமல், அறியாமைத்தனமாகக் கொல்லப்பட்டிருந்தால் அக்கொலைப் பாவபரிகாரத்தின் பொருட்டு,

உ

ஓம் குஹாய நம:

வணக்க முறை

அ. திருஞானம், சமயபுரம்.

உத்தம செயல்களிலேயே ஊக்கமுற்றுள்ள நமது பாரதகண்டத்தில் வணக்கமுறையானது தொன்றுதொட்டு ஒழுங்குபெறக் கையாளப்பெற்றுவரும் விஷயம் யாவரும் அறிந்ததொன்றும். வணக்க முறையென்பது கடவுளிடத்தும் பெரியோர்களிடத்தும் நாம் பய பக்தி விசுவாசத்துடன் மனம் வாக்கு காயங்களென்னும் திரிகரண சுத்தியாய் நடந்துகொள்ளவேண்டிய ஒழுக்கத்தைத் தெரிவிக்கும் பத்ததியாகும்.

இம்முறை மனவொடுக்கத்தை நாளடைவில் உண்ணத்தக்கது. "கெடுக்க வல்லதும், கெட்டவர் தங்களை ஒடுக்கவல்லதும்" மனமேயல்லவா? அந்த மனம் போகும் போக்கில் நாம் போகாதபடி நாம் போகவேண்டிய போக்கில் அதை நிறுத்தவேண்டியதே நமதுகடமை. இக்கடமைக்கு வணக்கமுறைதான் ஆதாரமானது. ஆகையால் அவ்வணக்கமுறையை நாம் ஒருபோதும் கைநழுவவிடக்கூடாது.

நாகலோகத்தில் தன்றசையைப் பச்சையாகவே தின்றுற்றுன் றீரும் என்பது கருத்து. இவை யோராதார் மாம்சத்தைச் சாப்பிடுகின்றனர். பிறர் கொல்லுவதைத்தானே நாம் சாப்பிடுகின்றோம்; நமக்கு கொலைப்பாவம் அணுகாதெனில், புலாலுண்பவனும் கொலைசெய்தவனாகவே ஆகிறான். எதனாலே, தலைகொண்டு வந்தார்க்கு பொருள் கொடுத்து' மென்றிருந்தான். கொலை வேண்டினவாறுபோலப், புலால்கொண்டு வந்தார்க்குப் பொருள்கொடுத்து மென்றிருந்தானுங் கொலைவேண்டினவனேயாகும். மார்க்கண்டேயர், "மாம்சங்களைத் தின்கிற பாவியானவன் பிராணிகளைக் கொல்லுகிறவன் போலவே ஆவான்; விலைக்கு வாங்கினவன் தனத்தினால் கொல்லுகிறான்; சாப்பிடுகிறவன் உண்பதனால் கொல்லுகிறான்; கொல்லுகிறவன் கட்டியடித்து கொல்லுகிறான்; கொல்லுவது இப்படி மூன்றுவகையாயிருக்கிறது" என்று கூறினார். பொருள்கொடுத்து ஒரு தன்மத்தை புரிகிறான்; அத்தன்மத்தைப் பொருள்கொடுத்தழைத்தினவனுக்குப் பாவமுண்டாவதுபோல், புலால் உண்பவனுக்கும் பாவம் உண்டு. ஆகவே, கொன்றவனுக்குத்தான் பாவம் தின்றவனுக்குப் பாவம் இல்லையென்று கூறுவது இழுக்காகும்.

(தொடரும்).

தேவாலயத்திற்குத் தெய்வ வணக்கஞ்செய்யச் செல்லும் பொழுது நாம் அனுசரிக்கவேண்டிய முறையைச் சிறிது கவனிப்போம். கோவிலுக்குப் போகுமுன் ஸ்நானஞ்செய்யவேண்டும்; ஸ்நானஞ்செய்ததும் தோய்த்து உலரவைத்த வேஷ்டியை உடுத்திக் கொண்டு சந்தியாவந்தனஞ் செய்தல்வேண்டும்; பிறகு, தேங்காய் பழம், தாம்பூலம், கற்பூரம், புஷ்பம், நெய் அல்லது எண்ணெய் முதலியவைகளைத் தட்டில் ஏந்திக்கொண்டு பாதசாரியாகத் தேவாலயத்திற்குச் செல்லவேண்டும். ஆலயத்தை நெருங்கினவுடன் அங்கிருக்கும் தீர்த்தத்தில் கை கால்களைச் சுத்தப்படுத்தி ஆசமனம் புரிந்து கோபுரதரிசனம் செய்யவேண்டும். பிறகு தேவநாமஸ்மரணையுடன் ஆலயத்துட் புகவேண்டும்; புகுந்தும் பலிபீடம் துவஜஸ்தம்பம் ஆகிய இவற்றைக் கைகூப்பித் தொழவேண்டும்; அப்பால் சிவாலயமானல் ரிஷபதேவரையும், விஷ்ணு ஆலயமானல் பெரியதிருவடிகளையும் நமஸ்க்ரித்து உள்ளேசெல்ல ஆக்ஞைபெற்று, அபிஷேக நிவேதன சமயமல்லாத சமயத்தில் திருச்சந்நதிக்குமுன் ஆண்மக்கள் அஷ்டாங்க நமஸ்காரமும், பெண்மக்கள் பஞ்சாங்க நமஸ்காரமும், மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு ஒன்பது பன்னிரண்டுமுறை செய்தல்வேண்டும். அதன்பின் சந்நிதானத்திற்குட் புகுந்து, துவாரபாலகரை வணங்கி, அவரனுமதிகொண்டு சந்நிதானமடைந்து ஆங்குள்ள அர்ச்சகரிடமும் தாம் கொண்டுபோன நிவேதனப்பொருள்களை கொடுத்து அவர் தேவாராதனைசெய்ய, நாம் கடவுளை தரிசித்து, தெய்வத்திற்கு நமது புறத்தைக்காட்டாது திரும்பவேண்டும். திரும்பி கரங்களைக் குவித்து மந்திரோச்சாரண ஸ்தோத்திரங்களைச் செய்துகொண்டு மூன்றுமுதல் இருபத்தொன்றுவரை ஒற்றையாகக் கடவுளைப் பிரதக்ஷணங்கள் செய்யவேண்டும். அவ்விதமே தேவியார் சந்நிதியுட் புகுந்து, நான்கு நமஸ்காரஞ்செய்து அம்மையைத் தரிசித்துப் பிரதக்ஷணஞ்செய்துக்கொண்டு வீட்டிற்குத் திரும்புதல்வேண்டும்.

ஆலயத்துள் ஆசாரமில்லாமல் போதல் கூடாது; மலம், சலம், எச்சில் இவற்றை விமோசனஞ்செய்யலாகாது. மூக்குச்சிந்தல், பொடி போடுதல், பீடி சிகரட்டு வகையாக்களைப்புகைத்தல், தாம்பூலம் தரித்தல், பலகாராதி சாப்பிடல், சயனங் கொள்ளுதல், மயிர் முடித்தல், ஆசனத்தில் இருத்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், சட்டை அணிந்துகொண்டும், சிரசிலும் தோளிலும் வஸ்திரம் அணிந்து கொண்டுசெல்லுதல், நிர்மாலியத்தை மிதித்தல், கடத்தல், ஸ்தூபி,

துவஜஸ்தம்பம், விக்ரகங்களின் நிழல் இவற்றை மிதித்தல், தாண்டல், வீண்வார்த்தை பேசல், சிரித்தல், விளையாடுதல், சுவாமிக்கும் பலி பீடத்திற்கும் நடுவே குறுக்கிடல், ஒருமுறை இருமுறை ஸ்வாமியை வலம்வரல், அகால தரிசனஞ்செய்தல், அபிஷேக நிவேதன கா்லங்களில் தரிசித்தல், சாமி வீதியுத்ஸவம் கொண்டுவரும்போது கோயிலுட்புகுந்து தெய்வத்தை வணங்குதல், ஆகிய இவைகள் கூடாவாம். ஆலயத்தில் வாசலில்லா வழியில் நுழைந்துபோதல் தகாது. கருப்புக் கம்பளிப்போர்வையுடன் செல்லுதல் குற்றம்; வெளிச்சமில்லா இடத்தில் மலர், மாலை தொடுப்பது உதவா; பகவானுடைய சொத்துக்களை நம்பொருட்டு உபயோகப்படுத்திக்கொள்ளுதல் தவறு.

தேகாரோக்கியத்திற்கும் இவ்வணக்கமுறை நல்லமருந்தாகும். இதனை நம்நாடு கையாளுவதுபோல் வேறெந்த நாடும் அத்துணைச் சிறப்பாகக் கையாளவில்லை. முகம்மதியர்களும் தமது பள்ளிவாசலுக்குப்போனதும், பாதரட்சையை வெளியில் கழற்றிவிட்டு உள்ளே சென்று அங்குள்ள தீர்த்தத்தில் கைகால் முதலியவற்றைச் சுத்தஞ் செய்துகொண்டு வணக்கஸ்தானத்தின்முன் முழங்காலிட்டு நெற்றித் தலம் தரையிற்பொருந்தக் குனிந்து வணங்கும் நல்ல பழக்கத்தை மேற்கொண்டிருக்கின்றனர். இவர்கள் வணக்கஞ் சிறந்ததே. இப்படி வணங்குவதால் இராஜஸ தாமஸ குணங்கள் நசித்து சத்துவகுணம் தலையெடுக்கின்றது. அது நன்மைகள் பலவற்றிற்கும் அனுகூலமாகின்றது.

மேல் நாட்டாரின் வணக்கமுறையே இராஜஸகுணத்தோடு கூடியது. அவர் உடுத்த உடுப்புடனும், பாதரட்சையுடனும் இருந்தபடியே ஒற்றைக்கையை நெற்றித்தலத்தில் பட்டதும் படாததுவுமாகக்காட்டி வணங்குகின்றனர். அவர்களுடன் பழகிய நம்மவர்களில் பலர் நம் பூர்வீகரின் கொள்கையை அறவேவிடுத்து, மேல்நாட்டாரைப்போலவே வணங்கும் முறையைத்தழுவி வருகின்றனர். இதனால் இவர்களுக்கு மனவொடுக்கமுண்டாவது அரிதாகின்றது. மனவொடுக்கம் ஏற்படாதபோது சாந்தம் தயைமுதலிய குணங்கள் பிரகாசிக்க இடமில்லாமற்போகின்றது. ஆகையால் இப்பழக்கத்தைவிட்டு நம்முன்னோர் அனுசரித்துவந்த முறையையே நம்மவனைவரும் கையாண்டு வந்து நம் தேசமுன்னேற்றத்தை அபிவிருத்திசெய்ய எல்லாம் வல்ல இறைவன் முன் நின்று கடாக்ஷித்தருளுவாராக.